வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 06.07.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 215 | பக்கங்கள் : 16




# அரசுக்குள் வலுக்கும் முரண்பாடு வெளியேறுவதா? சேர்ந்திருப்பதா?

## ஆராய்கின்றன பங்காளிகள்

கொழும்பு, ஜூன் 06

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நேரடித் தலையீடுகள் காரணமாக ஆளுந்தரப்புக்குள் அதிருப்தி நிலையில் இருக்கும் பங்காளிக் கட்சிகள் அரசிலிருந்து வெளியேறுவதா அல்லது சேர்ந்திருப்பதா என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

15

## யாழ். மாநகரில் மட்டும் நேற்று 55 தொற்றாளர்!

### 5 நாட்களேயான சிசுவுக்கும் தொற்று

யாழ்ப்பாணம், ஜூலை 06

யாழ்ப்பாணம் மாநகர மருத்துவ அதிகாரி பிரிவில் மட்டும் நேற்று 55 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அத்துடன் வடக்கு மாகாணத்தில் மொத்தமாக

15

## தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக தொற்றாளர் எண்ணிக்கையில் வீழ்ச்சி

### நேற்று 816 பேர் மாத்திரமே அடையாளம் என்கிறார் இராணுவத் தளபதி சவேந்திர



கொழும்பு, ஜூலை 06

இலங்கையில் நேற்று 816 பேர் மாத்திரம் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர

15

## அரச கூட்டணியிலிருந்து எவரும் வெளியேறலாம்

### இராஜாங்க அமைச்சர் செஹான் அதிரடி



கொழும்பு, ஜூலை 06

“அரசில் அமைச்சுப் பதவிகளை வகித்துக் கொண்டு அரசைக் குழப்பும் நடவடிக்கைகளை ஒரு சிலர் முன்னெடுத்து வருகின்றனர். அவ்வாறானவர்கள் அரச கூட்டணியிலிருந்து தாரளமாக வெளியேற முடியும்.

15

## நாட்டின் பொருளாதார பின்னடைவுக்கு கொரோனாவும் நல்லாட்சியுமே காரணம்

### அஜித் நிவாட் கப்ரால் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 06

“இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு நாடு முகம் கொடுத்துள்ள கொரோனா சூழல் மற்றும் நல்லாட்சி அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகள்

15

## பல்கலைக்கழகம் என்பது இராணுவ பங்கர் இல்லை

### இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் சீற்றம்



கொழும்பு, ஜூலை 06

“பல்கலைக்கழகம் என்பது இராணுவ பங்கர் இல்லை. இராணுவத்துக்கு அடங்கிச் செல்லும் இடமும் கிடையாது. கல்வித்துறையை இராணுவமயப்படுத்தும் நடவடிக்கை உலகில் வேறு எங்கும் இல்லை.”

- இவ்வாறு இலங்கை ஆசிரியர்கள் சேவை சங்கத்தின் பொதுச்செயலாளர்

15

## ஐ.தே.கவின் அழைப்பு மிக வேடிக்கையானது

### ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறது

கொழும்பு, ஜூலை 06

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயல்படுமாறு அதன் பொதுச் செயலாளர் அழைப்பு விடுத்துள்ளமை வேடிக்கையானதாகும். ஐக்கிய தேசியக் கட்சி அதன் அசுத்தங்களை நீக்கி சுத்தமாகிய பின்னர் எம்முடன் இணையுமாக இருந்தால் அதற்கான கதவுகள் திறக்கப்பட்டே இருக்கின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்

15

## வடக்கில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு இராணுவத்தினராலேயே தடுப்பூசி ஏற்றல்

### சுகாதார திணைக்களம் முன்னெடுக்கவில்லை என்கிறார் வடக்கு பணிப்பாளர் கேதீஸ்வரன்

யாழ்ப்பாணம், ஜூலை 06

வடக்கு மாகாணத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இராணுவத்தினராலேயே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சுகாதார திணைக்களத்தினால் அது முன்னெடுக்கப்படவில்லை என்று வடக்கு மாகாண சுகாதாரசேவைகள் திணைக்களப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் வவுனியா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் வசிக்கும் 60வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும்

15

## கொரோனா தொற்றினால் பெண்கள் 18 பேர் உட்பட மேலும் 32 பேர் மரணம்!

கொழும்பு, ஜூலை 6

இலங்கையில் மேலும் 32 கோவிட்-19 மரணங்கள் பதிவாகியுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மேலும் 32 கோவிட்-19 மரணங்கள் நிகழ்ந்தன என்று சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன உறுதிப்படுத்தினார்.

15




## 42 இலட்சத்துக்கும் அதிகமானோருக்கு ஏற்றப்பட்டுள்ளது கொரோனா தடுப்பூசி

கொழும்பு, ஜூலை 06

இலங்கையில் இதுவரை 42 இலட்சத்துக்கும் அதிகமானோருக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொற்று நோயியல் பிரிவு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, நாட்டில் மொத்தமாக 42 இலட்சத்து 22 ஆயிரத்து 194 பேருக்கு இவ்வாறு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

இதில், 29 இலட்சத்து 71 ஆயிரத்து 751 பேருக்கு தடுப்பூசியின் முதலாவது டோஸும், 12 இலட்சத்து 50 ஆயிரத்து 443 பேருக்கு தடுப்பூசியின் இரண்டு டோஸ்களும் செலுத்தப்பட்டுள்ளன.

அத்தோடு, 19 இலட்சத்து 31 ஆயிரத்து 714 பேருக்கு ‘சினோபார்ம்’ தடுப்பூசியின் முதலாவது டோஸும், 8 இலட்சத்து 51 ஆயிரத்து 969 பேருக்கு அதன் இரண்டாவது டோஸும் ஏற்றப்பட்டுள்ளது.

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது...!

அது ஒரு கலைவிழா. சற்று தாமதமாகத்தான் இந்த ஊர்க் குருவி அந்த விழா நடைபெறும் இடத்திற்கு போய்ச் சேர்ந்திருந்தார். அப்போது அந்த விழாவில் ஒருவர் பேசிக்கொண்டிருந்தார்.

சிறுவயதிலேயே இடதுசாரி சிந்தனையுடன் வாழ்க்கையைத் தொடங்கியவர் அவர். கம்யூனிஸ்ட் கட்சி மேடைகளில் அடிக்கடி அவரின் உரைகளைக் கேட்கலாம். யாழ்ப்பாணத்தின் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அவர் ஒரு தொழிற்சங்கவாதியும்கூட.

அவர் பேசிக்கொண்டிருந்தபோதுதான் இந்த ஊர்க்குருவி அந்த மண்டபத்தைச் போய்ச் சேர்ந்திருந்தார்.

ஊர்க்குருவியைக் கண்டதும் ஒரு நண்பர் அருகே வந்து கேட்டார், "நீங்கள் எத்தனை வருசமாக ஊடகத்துறையில் இருக்கிறீர்கள்?" என்று.

இதை ஏன் இப்போது கேட்கிறார் என்பது புரியவில்லை.

"ஏனடாப்பா உனக்கு இப்ப அது தேவையாயிருக்கிது?", என்று பதில் கேள்வி கேட்க, அவர் திரும்பவும் கேட்டார், "அது ஏன் உமக்கு, எத்தனை வருசம் எண்டு சொல்லுமன்",என்றார் மீண்டும்.

"இருபது வருசத்திற்கு மேலை வந்திட்டு தடாப்பா", என்றேன்.

"இருபது வருச அனுபவம் எண்டுறீர், முடிஞ்சால் அவரிட பேச்சிலை இருந்து ஒரு 'பொயின்ற்' எடுத்து ஒரு செய்தி எழுதும் பார்ப்பம்?", என்றார் நண்பர்.

அந்தத் தோழர் என்ன பேசுகிறார் என்பது சில வேளை அவருக்கே புரிந்திருக்குமோ தெரியவில்லை. இந்த சம்பவம்தான் எனக்கு அந்தச் செய்தியைப் படித்தபோது ஞாபகத்திற்கு வந்தது.

வடக்கில் அண்மைக்காலமாக அதிகம் பேசப்படும் சீனர்களின் கடலட்டை பண்ணை விவகாரம் தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தாரென வந்த அந்தச் செய்தியைத்தான் இங்கு குறிப்பிடுகின்றேன்.

இதுதான் செய்தியின் சாராம்சம்:

வடக்கில் இடம்பெறும் கடல் அட்டை விவகாரம் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நோக்கத்துடன் - பூகோள அரசியல் நோக்கங்களுடன் எடுக்கும் அரசியல் நடவடிக்கையாக நாங்கள் கருதினால், நிச்சயமாக எதிர்ப்போம்.

இப்படித்தான் கஜேந்திரகுமார் கூறியிருக்கிறார்.

அவர் ஆங்கிலத்தில் யோசித்துவிட்டு தமிழில் கருத்துச் சொல்லியிருக்கிறார் என்பது மட்டும் புரிகின்றது.

பூகோள அரசியல் நோக்கங்களுடன் எடுக்கும் அரசியல் நடவடிக்கையாக நாங்கள் கருதினால், என்றால் என்ன? அவர் என்ன கருதுகிறார் என்பது தெரியவில்லை. சீனாவுக்கும் நோகாமல், நமது மீனவர்களுக்கும் நோகாமல் அடிக்க முயல்கிறாரா?

சாதாரண கடலட்டை விடயத்தில்கூட ஒரு திடமான முடிவெடுக்க முடியாமல் அவர் தடுமாறுவது தெரிகின்றது. அவர் சீன சார்பு அரசியல் செய்வதாகவே அவரின் அரசியல் எதிரிகள் கூறிவரும் நிலையில், இது விடயத்தில் நேரடியாக பதில்சொல்லாமல் இப்படி மழுப்புவது அவரின் அரசியல் நேர்மைக்கு பொருத்தமானது அல்ல.

**- ஊர்க்குருவி**

# கொடுத்த கடனை கேட்டவர்மீது வாள்வெட்டு!

யாழ்ப்பாணம், ஜுலை 06

கொடுத்த கடன் பணத்தை கேட்பதற்காக வீட்டுக்கு சென்றவர் மீது தந்தையும் மகனும் சேர்ந்து வாளால் வெட்டியதில் அவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் கோண்டாவில் காளி கோயிலடியில் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் மோகனராஜா ரஜீவன் (வயது 37) என்பவர் தலை மற்றும் கழுத்து பகுதிகளில் கடும் காயங்களுக்கு இலக்காகியுள்ளார்.

வாள்வெட்டு தாக்குதலை நடத்திய தந்தையையும் மகனையும் கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன், தொடர்ந்து விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## முல்லைத்தீவில் தடுப்பூசி ஏற்றல்

முல்லைத்தீவு, ஜுலை 06

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி ஏற்றும் பணி நேற்று ஆரம்பமானது. முல்லைத்தீவு மாவட்டத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு புதுக்குடியிருப்பு சிறீசுப்பிரமணிய வித்தியசாலையில் இந்தப் பணி தொடங்கியது.

60 வயதுக்கு மேற்பட்டவர்கள் கோவிட்-19 தடுப்பூசியை பெற முடியும் என்று கிராமங்களில் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது.

முதல்கட்டமாக புதுக்குடியிருப்பு, வெலிஓயா பகுதிகளில் அமைந்துள்ள ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நேற்று தடுப்பூசியின் முதல் டோஸ் பெற்றவர்களுக்கு எதிர்வரும் ஓகஸ்ட் இரண்டாம் திகதி இரண்டாவது டோஸ் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஒஸ்மானிய கல்லூரியில் இன்று தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜுலை 06

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் பகுதிகளில் வசிக்கும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் திட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை ஒஸ்மானியக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதன்போது, ஜே/81, ஜே/83, ஜே/84, ஜே/85, ஜே/86, ஜே/87 ஆகிய பகுதிகளை சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தங்கத்தின் விலை ரூ. 6,000 உயர்வு!



யாழ்ப்பாணம், ஜுலை 06

யாழ்ப்பாணத்தில் தங்கத்தின் விலை நேற்று திங்கட்கிழமை 6 ஆயிரம் ரூபாயால் அதிகரித்துள்ளது. இதன்மூலம் 24 கரட் தூய தங்கம் நேற்று ஒரு இலட்சத்து 27 ஆயிரம் ரூபாயை எட்டியது.

நாட்டில் தங்கத்தின் கையிருப்பு பற்றாக்குறை காரணமாகவே விலை அதிகரித்ததாக கொழும்பு தங்க இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் நேற்று ஆபரணத் தங்கம் (22 கரட்) ஒரு பவுண் ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 500 ரூபாயாக அதிகரித்தது. கடந்த வெள்ளிக்கிழமை ஒரு லட்சத்து 10 ஆயிரத்து 900 ரூபாயாகக் காணப்பட்டது. (ஐ)

### கல்வி tv CHANNEL-1 — 06.07.2021 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

### கல்வி tv CHANNEL - 2 — 06.07.2021 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu 06.07.2021 செவ்வாய்க்கிழமை

பிலவ வருடம், ஆனி 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# இந்த நாடகமாவது அரங்கேறுமா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான, தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தமிழ்த் தேசியக் கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்றுபடுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றது. இது தொடர்பில் ரெலோவின் ஏற்பாட்டில் சில சந்திப்புக்களும் இடம்பெற்றிருக்கின்றன. தமிழர் அரசியலில் ஒற்றுமை தொடர்பில் பேசுவது புதிய விடயமல்ல. 2010இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கூட்டமைப் பிலிருந்து வெளியேறியதிலிருந்து, இது தொடர்பில் பலரும் பேசி வந்திருக்கின்றனர்.

கூட்டமைப்பு மேலும் உடைவுகளை சந்தித்துவிடக்கூடாது என்பதற்காக, அதனை ஒரு தனிக் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்னும் கோரிக்கைகளை பலரும் முன்வைத்திருந்தனர். கட்சிகள் மத்தியில் மட்டுமல்ல புத்திஜீவிகள், சிவில் சமூக தலைவர்கள் மத்தியிலிருந்தும் கூட்டமைப்பைப் பதிவு செய்யுமாறு தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனால், சம்பந்தன் அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர்கள் அதனை விரும்பவில்லை என்னும் பதிலையே சம்பந்தன் திரும்பத் திரும்பக்கூறிக் கொண்டிருந்தார்.

இன்று ஒற்றுமை பற்றிப் பேசும் மாவை சேனாதிராசாவும், கூட்டமைப்பை பதிவு செய்வதற்கு ஆதரவாக இருக்கவில்லை. கடந்த பாராளுமன்ற தேர்தலில் தோல்வியடைந்த பின்னர்தான், ஒற்றுமை தொடர்பான ஞானத்தை மாவை ஓரளவு பெற்றுக் கொண்டார். பத்து கட்சிகள் கூட்டு தொடர்பிலும் விவாதிக்கப்பட்டது. ஆனால், சம்பந்தன் அதனை பெரிதாக கண்டுகொள்ளாதபோது, மாவையால் துணிந்து விடயங்களை முன்னெடுக்க முடியவில்லை.

கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்து, அதற்கான முறையானதொரு ஜனநாயகக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தால், இன்று ஒற்றுமை தொடர்பில் கூட்டம்கூட வேண்டிய தேவைகள் ஏற்பட்டிருக்காது.

பலரும் பேசி களைத்துப் போன ஒற்றுமை தொடர்பில், இப்போது செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோ பேசுகின்றது. இந்த நாடகமாவது அரங்கேறுமா? ஆனால், இதிலுள்ள வேடிக்கையான பக்கம் என்னவென்றால், ஏனைய கட்சிகளுடன் ஒற்றுமை தொடர்பில் பேசும் ரெலோவினால், தாங்கள் அங்கம் வகிக்கும் கூட்டமைப்புக் குள்ளேயே ஒற்றுமையை ஏற்படுத்த முடியவில்லை. கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியை ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கோரியிருந்தார். ஆனால், தமிழ் அரசு கட்சி அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. சிறிதரனுக்கே அதனை வழங்கவேண்டுமென்று சுமந்திரன் ஒற்றைக்காலில் நின்றார்.

இன்றுவரை பேச்சாளர் பிரச்னைக்கு செல்வத்தினால் தீர்வு காண முடியவில்லை. பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு பாராளுமன்றத்தில் பேசுவதற்கு நேரம் ஒதுக்கப்படுவதில்லை. இதற்குக் காரணம் கொறோடா பதவியும் தமிழ் அரசு கட்சியிடம்தான் இருக்கின்றது. கிடைக்கும் நேரத்தை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்துக் கொள்கின்றனர். சித்தார்த்தனுக்கும் செல்வத்திற்கும் பேசுவதற்கு நேரம் கிடைப்பதில்லை. இந்தப் பிரச்னைக்கு இன்றுவரையில் கூட்டமைப்புக்குள் பேசித் தீர்வைக் காண முடியவில்லை. கூட்டமைப்புக்குள் ஏராளமான ஓட்டைகள் இருக்கின்றபோது, வெளியிலுள்ளவர்களையும் ஓட்டைக்குள்ளால் எட்டிப் பாருங்கள் என்று செல்வம் அழைப்பதால் என்ன நன்மை ஏற்பட்டுவிடப் போகின்றது?

ஒற்றுமை என்பதை வெறும் வார்த்தையால் ஏற்படுத்திவிட முடியாது. அதற்கு ஒரு முன்மாதிரியான தலைமைத்துவம் தேவை. உண்மையில் அவ்வாறான ஓர் ஆளுமையுடன் தமிழ் சூழலில் எந்தவொரு கட்சியும் இப்போது இல்லை. தேர்தல் நலன்களை தூக்கிவீசும் ஒரு தலைமையால் மட்டுமே அவ்வாறானதோர் ஒற்றுமையை சாத்தியப்படுத்த முடியும். ஆனால், அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அவ்வாறானதொரு கட்சி இப்போது தமிழ் மக்கள் மத்தியில் இல்லை. எனவே, கட்சிகளால் கட்சிகளை ஒற்றுமைப்படுத்த முடியாது. இதனை வெளியிலுள்ள புத்திஜீவிகள், சிவில் சமூக தலைவர்களே முன்னெடுக்க வேண்டும். அதுவும் பேசுவது போன்று இலகுவானதல்ல.

### பஸில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற மீள்பிரவேசம்:

# இன்றைய ஆட்சியை காப்பாற்றுமா அல்லது கவிழ்க்குமா?

- அலசுவது இராஜதந்திரி -



இலங்கையின் இன்றைய ஆட்சியை மற்றுமொரு பிரபலமான பௌத்த பிக்குவான வண. எல்லே குணவங்ச தேரர் ஆக்ரோஷமான முறையில் சாடியுள்ளார்.

இலங்கையில் 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கு - கிழக்கு யுத்தம் மும்முரமாக இடம் பெற்றுக் கொண்டிருந்தபோது தமிழீழ விடு தலைப் புலிகளுக்கெதிராக கடுமையான விமர்சனங்களை வெளியிடுவதில் முன்னின்றவரே வண. எல்லே குணவங்ச தேரர். ஆனால், தற்போதைய ஆட்சியை ஒரு காலனித்துவ ஆட்சி என வர்ணித்திருப்பதோடு, நாட்டு மக்கள் ஓர் இரண்டாவது சுதந்திர போராட்டத்துக்கு தயாராக வேண்டுமெனவும் வண.எல்லே குணவங்ச தேரர் கேட்டுக்கொண்டுள் ளார்.

ஏற்கனவே, ஆட்சியாளர்களின் போக்கை அபயராம விகாராதிபதி வண. முருத்தெட்டுவே ஆனந்த தேரர் மற்றும் அஸ்கிரிய பீடாதிபதி வண. அநுநாயக்க மெதகம தம்மானந்த தேரர் போன்ற நாட்டின் பிரபலமான பௌத்த குரு மார்கள் மிகக் கடுமையான முறையில் விமர் சித்திருந்தனர்.

**பஸில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற பிரவேசம்**

இத்தகைய பின்னணியிலேயே ராஜபக்ஷ சகோதரர்களில் ஒருவரான பஸில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற பிரவேசம் பற்றிய பேச்சும் பலமாக அடிபடுவதை அவதானிக்க முடிகின்றது.

முன்னாள் ஜனாதிபதியும் இன்றைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தேகாரேக்கி யம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இருக்கிறாரென்றே அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் ராஜபக்ஷ சகோதரர்களில் ஒருவரான பஸில் ராஜபக்ஷவை பாராளுமன்றுக்குக் கொண்டுவருவது பற்றியே தற்போது ஆளும்தரப்பில் ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பஸில் ராஜபக்ஷ ஒரு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராவார். இதுதவிர பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவரின் ஆலோசகராகவும் பஸில் ராஜபக்ஷ கடமையாற்றியிருந்தார்.

அமெரிக்க குடியுரிமையையும் கொண்டவரான பஸில் ராஜபக்ஷ மற்றும் அவரின் ஏனைய சகோதரார்களான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மற்றைய சகோதரரான நீர்ப்பாசனதுறை அமைச்சர் சமல் ராஜபக்ஷ ஆகியோர் அரசியல் பிரவேசம் செய்வதற்கு பிரதம மந்திரியான மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியே வழியமைத்திருந்தது.

இருந்தபோதிலும், தற்போது இலங்கையின் ஜனாதிபதி ஆட்சியும், பாராளுமன்ற ஆட்சியும் நாட்டு மக்களின் கடுமையான அதிருப்திக்குள் ளாகியுள்ளமையையே பௌத்த பிக்குவான வண. எல்லே குணவங்ச தேரரின் ஆக்ரோஷமான கண்டனம் வெளிப்படுத்துகின்றது.

நாட்டைப் பாதுகாப்பது குறித்து வண. எல்லே குணவங்ச தேரர் குறிப்பிட்டுள்ளதைப் பார்க்கும் போது தற்போதைய ஆட்சியாளர்களுக்கு எதிராக நாட்டிலுள்ள மக்கள் ஒன்று திரட்டப்பட்டு ஒரு கிளர்ச்சி தூண்டிவிடப் பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே கருத முடியும்.

**'பொம்மலாட்ட' ஆட்சி**

இன்றைய ஆட்சியை, ஒரு சுதந்திரமான இலங்கை அரசின் ஆட்சியல்ல என்று குறிப்பிட்டுள்ள வண. எல்லே குணவங்ச தேரர், வெளிநாட்டு சக்திகளின் ஒரு 'பொம்மலாட்ட' ஆட்சி என்ற கருத்துப்படவே இன்றைய ஆட்சியை விபரித்துள்ளார்.


வண. எல்லே குணவங்ச தேரர் கூறியதை நோக்கும்போது, பொருளாதார பலத்தோடு தற்போதைய நவகாலனித்துவ முறை உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படுவதையே அவதானிக்க முடிகின்றது. இதுவிடயத்தில் சீனா முன்னிற்பதை வண. எல்லே குணவங்ச தேரர் சூசகமாக தெரிவித்துள்ளமையையும் அறிய முடிகின்றது.

கடந்த நூற்றாண்டுகளில் காலனித்துவ ஆட்சியாளர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் தமது இராணுவ பலத்துடன் இலங்கையைக் கைப்பற்றி பின்னர் தமது கைவரிசையை அரசியல், பொருளாதார ரீதியாக காண்பித்திருந்தனர்.

இலங்கையில் மட்டுமல்ல, ஐரோப்பிய நாடுகளின் ஆட்சிக்கு உட்பட்ட அனைத்து நாடுகளிலும் இராணுவ ரீதியாகவும் பின்னர் பொருளாதார விஸ்தரிப்பாகவுமே காலனித்துவ ஆட்சிகள் உருவாகியிருந்தன. ஆனால், சீனா 'கத்தியின்றி இரத்தமின்றி' நாசூக்காக 'வாழைப் பழத்தில் ஊசியை ஏற்றுவது'போல தனது பொருளாதார பலத்தை மையமாகக்கொண்ட வல்லாதிக்க விஸ்தரிப்பை மேற்கொள்வதையே வண. எல்லே குணவங்ச தேரர் சாடியிருக்கிறார். அத்தோடு, சீனாவின் வல்லாதிக்க விஸ்தரிப்புக் கெதிரான போராட்டத்தை ஒரு விடுதலை போராட்டமெனவும் விமர்சித்துள்ளார்.

இத்தகைய பின்னணியில் பஸில் ராஜபக்ஷவின் உத்தேச பாராளுமன்ற மீள் பிரவேசம் இன்றைய ஆட்சியை காப்பாற்றுமா அல்லது கவிழ்க்குமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு



ஜூலை - 06 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம் - ஆனி 22
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி : துவாதசி

## இன்றைய ராசிபலன்

06.07.2021

**மேடம்**
முறையான வழிபாடுகளில் ஈடுபடுவீர்கள். வீண் பழி அகலும். மாற்றம் ஏற்படும். நல்லசெய்தி வரும். பிரச்னை மறையும். மன மாற்றம் ஏற்படக் கூடும். நிதி வளர்ச்சி இருக்கும்.

**இடபம்**
நண்பருக்கு உதவுவீர்கள். திடீர் அன்பளிப்பு கிடைக்கும். குடும்பப் பிரச்னையை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். செலவு கட்டுக்குள் வரும். பழியில் இருந்து மீள்வீர்கள்.

**மிதுனம்**
பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு பாராட்டு கிடைக்கும். வருமானம் திருப்தி தரும். உடல்நிலை சீராகும். உறவினர்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவர். படிப்புக்கேற்ற வேலை கிடைக்கும்.

**கடகம்**
மனதில் பலம் அதிகரிக்கும். வாழ்வில் ஏற்பட்ட கலக்கம் தீரும். இன்றைய நாள் நீங்கள் விரும்பி எதிர்பார்த்த விதத்தில் அமையும். மனதுக்கு நெருக்கமானவர்களிடம் ஈகோ காண்பிக்க வேண்டாம்.

**சிம்மம்**
மகிழ்ச்சியான வாழ்க்கை மலரும். வாழ்க்கைத் துணை கிடைப்பார். தத்தளித்துக் கொண்டிருந்த உங்களுக்கு நன்மை நடக்கும். சொத்து விவகாரங்களால் லாபம் சேரும். பலம் அதிகரிக்கும்.

**கன்னி**
நேற்றைய பயம் நீங்கும். தந்தையால் நன்மை கிடைக்கும். ஊக்கமும், உற்சாகமும் குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். நிதானம் தேவை. பதட்டமுடன் எதையும் செய்ய வேண்டாம்.

**துலாம்**
உறவினருடன் பகை வராமல் கவனமாக இருங்கள். விருப்பமில்லாத நிகழ்வுகள் நடந்த சூழ்நிலை மாறும். வீட்டில் உள்ளவர்களுடன் ஒற்றுமை பலப்படும்.

**விருட்சிகம்**
பணியிடத்தில் திறம்பட செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். விலகிச் சென்ற சகோதரர் சொந்தம் கொண்டாடுவார். பிள்ளைகளின் முயற்சி வெற்றி பெறும். மகிழ்ச்சி கூடும்.

**தனுசு**
பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய பாதை புலப்படும். எதையும் நிதானமாக செய்வீர்கள். பணியிட வளர்ச்சி சிறப்பாகும்.எதிர்காலத் திட்டங்களில் மும்முரம் காட்டுவீர்கள்.

**மகரம்**
லேசான உடல்நலக்குறைவு ஏற்பட்டு சரியாகும். ஆன்மிகத்தில் ஈடுபடுவீர்கள். அரசால் நன்மை உண்டு. அலுவலகத்தில் புதிய பொறுப்பை ஏற்க வேண்டி வரும்.

**கும்பம்**
புதிய பணியாளர்களை சேர்க்கும் விஷயத்தில் கவனம் தேவை. திட்டமிட்ட விஷயங்களைச் செய்து முடிப்பீர்கள். பூர்வீக சொத்துகளில் ஏற்பட்டிருந்த வில்லங்கம் தீரும்.

**மீனம்**
ஆடம்பர நாட்டத்தால் மனவருத்தம் ஏற்படலாம். சம்பாதிப்பது நேர் வழியிலா என யோசித்து செயல்படுங்கள். நேற்று பிரச்னை இன்று இருக்காது. மனதில் மகிழ்ச்சி கூடும்.

# உலகிலேயே பெற்றோல், டீசல் அதிகமான விலைக்கு விற்பதில் இந்தியா முதலிடம்

## பிரேமலதா விஜயகாந்த் கண்டனம்

சென்னை, ஜூலை 06

பெற்றோல், டீசல் விலை உயர்வை கண்டித்து தமிழகம் முழுவதும் கலெக்டர் அலுவலகங்கள் முன்பு தே.மு.தி.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை கலெக்டர் அலுவலகம் அருகே மத்திய, மாநில அரசுகளை கண்டித்து தே.மு.தி.க. சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதில், தே.மு.தி.க. பொருளாளர் பிரேமலதா உள்ளிட்டோர் கலந்து கொண்டு கண்டன முழக்கங்கள் எழுப்பினர்.

பின்னர், நிருபர்களிடம் பேசிய பிரேமலதா, பெற்றோல், டீசல் விலை உயர்வால் முச்சக்கரவண்டி, மற்றும் வாடகைக்கார் சாரதிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய பொருட்களின் விலை உயரும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. உலகிலேயே பெற்றோல், டீசல்



அதிகமான விலைக்கு விற்பதில் இந்தியா தான் முதலிடம் வகிக்கிறது, இதை நாங்கள் கண்டிக்கிறோம் .

ஜி.எஸ்.டி. வரம்புக்குள் பெற்றோல், டீசலை கொண்டு வர வேண்டும். தமிழ்நாடு முழுவதும் அறிவிக்கப்படாத மின்வெட்டு நிலவி வருகிறது எனவும், மேகதாதுவில் கர்நாடகா அணை கட்டுவதை கண்டிக்கிறோம் என்றும் கூறினார்.

# தமிழகத்தில் இரண்டு மாதங்களுக்குப் பின்னர் கோவில்கள் உள்ளிட்ட வழிபாட்டு தலங்கள் திறப்பு

சென்னை, ஜூலை 06

தமிழகத்தில் சுமார் 2 மாதங்களுக்கு பின் கோவில்கள் உள்ளிட்ட வழிபாட்டு தலங்கள் நேற்று திறக்கப்பட்டமையால் பக்தர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

தமிழகத்தில் கொரோனா ஊரடங்கு காரணமாக கோவில்கள், கிறிஸ்தவ ஆலயங்கள், மசூதிகள் உள்ளிட்ட அனைத்து மத வழிபாட்டு தலங்களும் கடந்த ஏப்ரல் மாதம் முதல் மூடப்பட்டன. அதே வேளையில் கோவில்களை திறந்து அந்தந்த பணியாளர்கள் மட்டும் சென்று ஆகம விதிப்படி, வழக்கமான பூஜைகளை செய்து வந்தனர். வழிபாட்டு தலங்களில் பக்தர்கள் அனுமதிக்கப்படவில்லை.

ஊரடங்கில் கூடுதல் தளர்வுகள் அறிவிக்கப்பட்டதால் நேற்று திங்கட்கிழமை முதல் தமிழகத்தில் இந்து சமய அறநிலைய துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோவில்கள் உள்பட அனைத்து மத வழிபாட்டு தலங்களும் முழுமையாக திறக்கப்பட்டு பக்தர்கள் வழிபட அனுமதிக்கப்பட்டது.

இந்த நிலையில் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து வழிபாட்டு தலங்களும் நேற்று அதிகாலையில் திறக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டன. அதிகாலையிலேயே கோவில்களில் திரண்ட திரளான பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று சமூக இடைவெளியை கடைப்பிடித்து வழிபாடு செய்து வருகின்றனர். கோவில் நுழைவு வாயிலில் பக்தர்களின் உடல் வெப்பநிலை சரிபார்க்கப்பட்டு கிருமி நாசினி கொண்டு கைகளை சுத்தம் செய்த பின்னரே கோவிலுக்கும் அனுமதிக்கப்படுகின்றனர்.

## மேகதாது அணை விவகாரம்;

# மத்திய அரசுடன் பேச்சு நடத்த துரைமுருகன் டில்லி பயணம்

சென்னை, ஜூலை 06

சர்ச்சைக்குரிய மேகதாது அணை விவகாரம் தொடர்பாக மத்திய அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத்தை சந்திக்க தமிழக நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் நேற்று புதுடில்லி புறப்பட்டு சென்றுள்ளார்.

காவிரியில் மேகதாது அணை கட்டக் கூடாது என தமிழ்நாடு அரசு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. மேகதாது அணைக்கு ஒப்புதல் கேட்டு கர்நாடக முதலமைச்சர் எடியூரப்பா எழுதிய கடிதத்துக்கும், முதல்வர் மு.க.ஸ்டாலின் மறுப்பு தெரிவித்துவிட்டார்.

கர்நாடக உள்துறை அமைச்சர் பசவராஜ் பொம்மை செய்தியாளர்களை சந்தித்தபோது, “மேகதாதில் எங்கள் எல்லைக்குள்தான் கட்டுமானத்தை தொடங்கி இருக்கிறோம். தமிழகத்தின் பகுதிக்குச் செல்லும் நீரை நாங்கள் தடுக்கவில்லை.

தமிழ்நாட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு தேவையில்லாமல் இந்தத் திட்டத்தை எதிர்க்கிறது. இத்திட்டத்திற்கு தமிழ்நாடு எதிர்ப்பு தெரிவித்தால், சட்டப்படி அதை எதிர்கொள்வோம்” என்று கூறினார்.

இதற்கிடையில், கர்நாடக காங்கிரஸ் தலைவர் சிவகுமார் தனது ருவிட்டர் பக்கத்தில், “ஒரு மாநிலமானது தனது திட்டங்களுக்கு மற்றொரு மாநிலத்திடம் அனுமதி பெறத் தேவையில்லை என்று உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வு தீர்ப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி கூறியுள்ளது. ஆகவே, கர்நாடக முதலமைச்சர், தமிழக முதலமைச்சரிடம் அனுமதி கோருவது அரசியல் விருப்பமின்மை” என்று பதிவிட்டுள்ளார். இந்த சூழலில், மேகதாது அணை தொடர்பாக ஒன்றிய நீர்சக்தி துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத்தை சந்திப்பதற்காக தமிழ்நாடு நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் விமானத்தில் நேற்று புதுடில்லிக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் துரைமுருகன், “மேகதாது அணை விவகாரம் தொடர்பாக மத்திய அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத்தை சந்திக்க இருக்கிறோம். காவிரி மேலாண்மை ஆணையம் தொடர்பாகவும் விவாதிக்க உள்ளோம்” என்று கூறினார்.

# பதவி விலகுகின்றாரா அமைச்சர் கம்மன்பில?

## நம்பிக்கையில்லாப் பிரேரணை 19ஆம் திகதி விவாதத்துக்கு

கொழும்பு, ஜூலை 06

**எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டமை தொடர்பில் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை எதிர்வரும் 19 மற்றும் 20ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.**

அதேவேளை, 20ஆம் திகதி மாலை பிரேரணை மீது வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது, குறித்த திகதிகளில் அந்தப் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தவிர்க்க அமைச்சுப் பதவியில் இருந்து விலகுவது குறித்து அமைச்சர் உதய கம்மன்பில முக்கிய சில நபர்களுடன் கலந்தாலோசித்து வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரசுக்குள் எழுந்துள்ள நெருக்கடி நிலைமைகளால் அமைச்சர் உதய கம்மன்பில மனமுடைந்துள்ளார் எனவும் கட்சி வட்டாரங்களில் தெரிய வருகின்றது.

நாட்டின் நெருக்கடியான நிலைமையில் எரிபொருள் விலையேற்றத்தை மேற்கொண்ட காரணத்தால் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை பிரதான எதிர்க்கட்சியினர் கொண்டு வந்துள்ளனர்.

இதனால் தனது அரசியல் பயணத்துக்குக் களங்கத்தை ஏற்படுத்தாத வகையில் நடவடிக்கை எடுப்பது குறித்து அமைச்சர் உதய கம்மன்பில தனக்கு ஆலோசனை வழங்கும் நிபுணர்கள் சிலருடனும், கட்சியின் முக்கிய சில நபர்களுடனும் கலந்துடையாடியுள்ளார் எனவும் கட்சியின் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமைச்சுப் பதவியைத் துறப்பது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது எனவும், எனினும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனும் இது குறித்து தனிப்பட்ட முறையில் கலந்துரையாடி தீர்மானம் ஒன்றை அவர் எடுக்கவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக இலக்கு வைத்து அரசின் தலைமைக் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினரால் முன்னெடுக்கப்படும் அரசியல் ரீதியிலான தாக்குதல்களால் அவர் மனமுடைந்துள்ளார் எனவும் அவருடன் நெருக்கமான நபர் ஒருவர் மூலமாகத் தெரியவந்துள்ளது.

# சுகாதார நடைமுறைகளை மறந்தால் டெல்டா அலையும் உருவெடுக்கும்!

## சுகாதார சேவை பணிப்பாளர் எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 06

“மக்கள் சுகாதார நடைமுறைகளை உரிய வகையில் பின்பற்றாவிடின் நாட்டில் மற்றுமொரு கொரோனா அலை ஏற்படுவதை தடுக்க முடியாது.” என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் நேற்று தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது ‘டெல்டா’ திரிபு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“டெல்டா திரிபு அடையாளம் காணப்பட்ட நாடுகளில், எடுத்த எடுப்பிலேயே வைரஸ் தொற்று வேகமாக பரவியதற்கான சான்று இல்லை. கட்டம்கட்டமாகவே பரவி, பெரும் அச்சுறுத் தல் நிலையை ஏற்படுத்தியுள்ளது. வைரஸ் பரவலின் வேகம் என்பது எமது நடத்தையின் அடிப்படையில்தான் தீர்மானிக்கப்படும். நாம் இடமளித்தால்தான் அது பரவும். எனவே, சுகாதார நடைமுறைகளை பின்பற்றாவிடின் எதிர்காலத்தில் அலையொன்று உருவாவதை தடுக்க முடியாது.” - எனவும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

# மாகாணங்களுக்கிடையே போக்குவரத்து தடை; யாழ்-கொழும்பு சொகுசு பஸ்களுக்கு அனுமதி!

யாழ்ப்பாணம், ஜூலை 06

மாகாணங்களுக்கிடையிலான பயணக்கட்டுப்பாடுகள் 19 ஆம் திகதிவரை வரை நீடிக்கப்படுவதாக அரசு அறிவித்திருக்கிறது.

ஆனால், யாழ். - கொழும்பு சொகுசு பஸ்கள் தமது சேவையை ஆரம்பித்துள்ளதாகப் பலரும் தெரிவித்துள்ளனர்.

கொரோனா பரவலின் காரணமாக விதிக்கப்பட்ட பயணக்கட்டுப்பாடுகளில் மாகாணங்களுக்குகிடையிலான பயணக்கட்டுபாடுகள் 19 ஆம் திகதிவரை வரை நீடிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் யாழ்.- கொழும்பு சொகுசு பஸ்கள் தினமும் சேவையில் ஈடுபட்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

டெல்டா வைரஸ் திரிபு ஆரம்பித்துள்ள இந்த வேளையில் இந்த செயற்பாடு யாழ்ப்பாணத்துக்கு பெரும் ஆபத் தான நிலைமையை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இரண்டு ‘டோஸ்’களையும் பெற்றிருந்தாலும் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுங்கள்!

கொழும்பு, ஜூலை 06

கொரோனா தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பொதுமக்கள் பெற்றிருந்தாலும் சுகாதார வழிகாட்டல்களை உரியவாறு பின்பற்றவேண்டியது அவசியம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நோயாளர்கள் குறைவாக பதிவாகுவதால், ஆபத்து இல்லை என்ற அடிப்படையில் செயற்பட முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் ஆயிரத்து 500 முதல் 2 ஆயிரம் வரை நோயாளர்கள் பதிவாகின்ற நிலையில், டெல்டா திரிபுடனும் நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதாக அவர் கூறினார்.

இவ்வாறான நிலையில், எதிர்காலத்தில் வேறு திரிபுகள் ஏற்படவும் வாய்ப்புள்ளதாக அவர் தெரிவித்தார்.

எனவே, சுகாதார வழிகாட்டல்களை உரியவாறு பின்பற்ற வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

# அமெரிக்காவுடன் இணைந்து பணியாற்ற இலங்கை தயார்!

## தினேஷ் குணவர்த்தன அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 06

இரு தரப்பு மற்றும் பல தரப்பு விவகாரங்களில் பரஸ்பர நலன்களை முன்னேற்றுவதற்காக அமெரிக்காவுடன் இணைந்து பணியாற்ற இலங்கை தயாராக உள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்க செயலர் அன்ரனி பிளிங்கனுக்கு எழுதிய கடிதத்தில், வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

அந்த கடிதத்தில், அமெரிக்காவின் சுதந்திரத்தின் 245 ஆவது ஆண்டு நிறைவின் நிமிர்விற்கு வெளிவிவகார அமைச்சர் தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்தார்.

“1948 இல் இராஜதந்திர உறவுகள் நிறுவப்பட்டதிலிருந்து, அமெரிக்காவுடனான இலங்கையின் உறவுகள் பரஸ்பர நன்மை பயக்கும் ஒத்துழைப்பின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்து விரிவடைந்து வருகின்றன. எங்கள் இரு நாடுகளின் மற்றும்



மக்களின் முன்னேற்றத்திற்காக இந்த பன்முக மற்றும் துடிப்பான கூட்டாண்மை மேலும் பலப்படுத்தப்பட்டு ஆழமடையும் என்று நான் நம்புகிறேன்,” என்று குணவர்த்தன கூறியுள்ளார்.

இலங்கை உட்பட தேவைப்படும் நாடுகளுக்கு மில்லியன் கணக்கான டோஸ் தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்க அமெரிக்க ஜனாதிபதி பைடனின் சமீபத்திய முயற்சி உட்பட, கோவிட்-19 தொற்று நோயைக் கட்டுப்படுத்த அமெரிக்கா வழங்கிய விலைமதிப்பற்ற ஆதரவையும் உதவியையும் இலங்கை அரசாங்கமும் மக்களும் ஆழமாகப் பாராட்டுகின்றனர் என்றும் அவர் அதில் கூறியுள்ளார்.

# வடமராட்சி கிழக்கில் சட்டவிரோத மீன்பிடியில் வெளிமாவட்ட மீனவர்

யாழ்ப்பாணம், ஜூலை 06

வடமராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் சட்டவிரோத கடற்றொழிலில் வெளிமாவட்ட மீனவர்கள் ஈடுப்படுகின்றனரென வட மராட்சி கிழக்கு கடற்றொ ழிலாளர்கள் கவலை தெரி வித்துள்ளனர்.

அனுமதிக்கப்படாத சுருக்கு வலைகள் மற்றும் வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் தங்களின் தொழில் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும், சிறியளவில் முதலீடுகளை மேற்கொண்டு கடற்றொழிலையேதமது முழுமையான வாழ்வாதார தொழிலாக கொண்டுள்ள கடற்றொழிலாளர்கள் இதனால் அதிகளவு பாதிப்புக்குள்ளாகியுள்ளனரென வும் தெரிவித்துள்ள வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள், இது தொடர்பில் தாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

# பிளாஸ்ரிக்,பொலித்தீன் பயன்பாட்டை நாட்டில் முற்றிலும் அகற்றமுடியாது

## சுற்றாடல் அமைச்சின் செயலர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 06

பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பயன்பாட்டை முற்றிலுமாக அகற்ற முடியாது என சுற்றாடல் அமைச்சின் செயலாளர், விசேட மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க கூறினார்.

ஆனால் அவற்றின் பயன்பாட்டைக் குறைக்க சில திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் இதைச் செய்ய முடியும் என அவர் தெரிவித்தார்.

3ஆர் ஸ்ரான்ட்ஸ் முறை மூலம் இதனைக் குறைக்க முடியுமென்றும் இது குறைத்தல் - மறுசுழற்ச - மறுபயன்பாடு ஆகியவற்றைக் குறிக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.இது பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பயன் பாட்டைக் குறைக்க உதவுமென்றும் அவர் சுட் டிக்காட்டினார்.

அத்தியாவசியமான ஆனால், மாற்று பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் தயாரிப்புகளை தடை செய்யும் பல அமைச்சரவை ஆவணங்களை அமைச்சர் மஹிந்த அமரவீர முன்வைக்கவுள்ளாரெனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் நிறுவனங்களால் தயாரிக்கப்படும் பொருட்களை விற்க மூன்று மாத கால அவகாசம் அளித்துள்ளதாகவும் ஆனால், இதுபோன்ற சலுகைகளை மீண்டும் மீண்டும் வழங்க தயாராக இல்லையெனவும் அவர் குறிப்பிட்டார்.

சுற்றுச்சூழல் மற்றும் நாட்டின் மனித ஆரோக்கியத்தை மனதில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

# கம்மன்பிலவுக்கு எதிரான பிரேரணையை ஆதரிக்க எட்டு தமிழ்க் கட்சிகள் தீர்மானம்!

கொழும்பு, ஜூலை 06

**வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக 10 காரணங்களை அடிப்படையாகக்கொண்டு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை ஆதரித்து வாக்களிக்கும் தீர்மானத்தை 8 தமிழ்க் கட்சிகள் எடுக்கும் எனத் தெரியவருகின்றது.**

ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டு வைத்துள்ள மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, வே.இராதாகிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி மற்றும் பழனி திகாம்பரம் தொழிலாளர் தேசிய சங்கம் ஆகியன பிரேரணையை ஆதரிக்க ஏற்கனவே முடிவெடுத்துள்ளன.

எனினும், இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான மாவை சேனாதிராசா தலைமையிலான இலங்கைத் தமிழ்அரசுக் கட்சி, செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோ மற்றும் த.சித்தார்த்தன் தலைமையிலான புளொட் ஆகிய கட்சிகளின் உத்தியோகபூர்வ முடிவு இன்னும் வெளியாகவில்லை என்றபோதிலும் ஆதரித்து வாக்களிக்கும் தீர்மானமே விரைவில் எடுக்கப்படலாம் என உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேபோல் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியனவும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு நிலைப்பாட்டையே எடுக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சிலவேளை வாக்கெடுப்பில் பங்கேற்காவிட்டால்கூட பிரேரணையை எதிர்த்து வாக்களிக்கும் நிலைப்பாட்டில் மேற்படி கட்சிகள் இல்லை.

அதேவேளை, ஆளுங்கூட்டணியிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. மற்றும் பிள்ளையானின் கட்சி வலுசக்தி அமைச்சருக்கு எதிரான பிரேரணையையை எதிர்க்கவுள்ளன.



அக்கராசன் அஞ்சலி நிகழ்வில்

# மாலையை பறித்தெறிந்து இராணுவம் அட்டகாசம்

கிளிநொச்சி, ஜூலை 06

கிளிநொச்சி அக்கராயனை ஆண்ட குறுநில மன்னன் அக்கிராசனுக்கு வணக்கம் செலுத்த முற்பட்டவர்களிடம் இருந்து பாதுகாப்புத் தரப்பினர் மாலையை பறித்தெறிந்த சம்பவத்தால் அக்கராயனில் நேற்று பதற்றமான சூழல் ஏற்பட்டது.

13ஆம் நூற்றாண்டில் அக்கராயன் பிரதேசத்தை ஆட்சி செய்த அக்கிராசன் என்ற குறுநில மன்னனுக்கு 2018 ஆம் ஆண்டு ஜூலை 05ஆம் திகதியாகிய இதே நாள் சிலை திறந்து வைக்கப்பட்டது.

சிலை திறக்கப்பட்ட நாளில் மன்னனுக்கு வணக்கம் செலுத்துவதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள் கிராமத்து மக்கள் எனப் பலரும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

நேற்றைய நாள் விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் நினைவு நாள் என்பதால் நினைவு வணக்கம் செலுத்தவேண்டாம் என்று பொலிஸார் உட்பட்ட படைத்தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்தித்தனர்.

இருந்தபோதிலும் அதனையும் மீறி வணக்கம் செலுத்த முற்பட்டபோது அங்கு நின்றவர்கள் வைத்திருந்த மாலை மற்றும் மலர்களை படைத்தரப்பினர் பறித்து வீசினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தை அடுத்து அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டது.

கிளிநொச்சி அக்கராயன் அம்பலப்பெருமாள் சந்தியிலேயே இந்த சிலை நிறுவப்பட்டுள்ளது.

அக்கிராசன் மன்னன் கிளிநொச்சியின் அக்கராயன் பிரதேசத்தை ஆட்சி செய்துள்ளதுடன் அக்கராயன் குளத்தையும் கட்டுவித்துள்ளார் என்றும், இவரது பெயரால் அழைக்கப்பட்ட இந்தப் பிரதேசம் அக்கிராசன் என்பது மருவி அக்கராயன் என காலப்போக்கில் அழைக்கப்பட்டதாகவும் வரலாற்றாசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுபோக நெல் அறுவடை!

முல்லைத்தீவு, ஜூலை 06

முல்லைத்தீவு கோட்டைகட்டிய குளம் மற்றும் அம்பலப்பெருமாள் குளம் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கை அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் நெல்லை குறைந்த விலைகளில் விற்பனை செய்யவேண்டியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

ஏனைய பிரதேசங்களில் அறுவடை செய்யும் நெல்லை தனியாருக்கோ அல்லது நெல் சந்தைப்படுத்தும் சபைக்கோ விற்பனை செய்வதற்கு உரிய போக்குவரத்து வசதிகள் போக்குவரத்து பாதைகள் சீராக இருப்பதனால் அவற்றை விற்பனை செய்யக்கூடியதாக உளது.

ஆனால், எங்கள் பிரதேசத்தில் உரிய போக்குவரத்து வசதிகள் இன்மை, பாதைகள் சீரின்மை காரணமாக தமது பிரதேசத்தில் உள்ள தங்களிடம் வியாபாரிகள் மிகக் குறைந்த விலைகளில் நெல்லைக் கொள்வனவு செய்வதுடன் மூடை ஒன்றுக்காக 75 கிலோ 76 கிலோ என்ற அடிப்படையிலே நெல்கொள்வனவு செய்யப்படுவதாகவும், தற்போது சிவப்பு நெல் ஒரு மூடைக்கு 76 கிலோ என்ற அடிப்படையில் கொள்முதல் செய்யப்படுவதுடன் இதற்கான விலையும் 3,750 ரூபாவாக உள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

பயிர்செய்கை மேற்கொள்ளும்போது கிருமிநாசினிகள், களை நாசினிகள், உரம் என்பன தட்டுப்பாடு காரணமாகவும் தாங்கள் பாதிக்கப்பட்டதுடன் அதிகூடிய விலைகளில் இவற்றை பெற்று நெற்செய்கை மேற்கொண்டதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

முல்லைத்தீவு வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள அம்பல பெருமாள் குளத்தின் கீழ் 360 ஏக்கர் நிலப்பரப்பிலும் கோட்டைகட்டிய குளத்தின் கீழ் 210 ஏக்கர் நிலப்பரப்பிலும் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 1,625 பேர் குணமடைவு

கொழும்பு, ஜூலை 06

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 1,625 பேர் குணமடைந்துள்ளனர்.

இதனை அடுத்து கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 34 ஆயிரத்து 942 ஆக உயர்ந்துள்ளது.

நாட்டில் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள 2 இலட்சத்து 65 ஆயிரத்து 630 நோயாளர்களில் 3, 236 பேர் உயிரிழந்தனர்.

# கிளிநொச்சியில் வறிய குடும்பத்துக்கு வீடு கட்டிக் கொடுத்தது இராணுவம்!



கிளிநொச்சி, ஜூலை 06

இராணுவத்தினரால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 20 லட்சம் ரூபாய் பெறுமதியான வீடு பயனாளிகளிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்றது. கிளிநொச்சி இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எச்.பி.ரணசிங்கவின் ஆலோசனைக்கு அமைவாக 57ஆவது படைப்பிரிவினால் இந்த வீடு புதிதாக நிர்மாணிக்கப்பட்டது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிருஸ்ணபுரம் பகுதியில் வாழும் கூலித்தொழிலாளி குடும்பமான அரியதாஸ் ரமேஸ் என்ற 4 அங்கத்தவர் கொண்ட குடும்பத்துக்கு இவ்வாறு இராணுவத்தினரால் 20 லட்சம் ரூபா பெறுமதியில் வீடு நிர்மாணித்து கையளிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி இராணுவ கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எச்.பி.ரணசிங்க கலந்துகொண்டு வீட்டினை குடும்பத்தினரிடம் கையளித்தார். தொடர்ந்து தமிழர் பாரம்பரிய முறையில் பால் காய்ச்சப்பட்டது.

# ரிஷாத் மனு மீதான விசாரணை; நான்காவது நீதியரசரும் விலகல்

கொழும்பு, ஜூலை 06

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரின் சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோர் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனு விசாரணையில் இருந்து மற்றோர் உயர் நீதிமன்ற நீதியரசர் விலகியுள்ளார்.

அதன்படி, மனுவை விசாரிக்க நியமிக்கப்பட்ட நீதியரசர்கள் கொண்ட அமர்வில் இருந்து நான்காவது நீதியரசராக மஹிந்த சமயவர்த்தன விலகியுள்ளார்.

குறித்த மனு மீதான விசாரணை நேற்று காலை எடுத்துக் கொள்ளப்பட்டபோது, நீதியரசர் மஹிந்த சமயவர்த்தன தனிப்பட்ட காரணங்களுக்காக அமர்வில் இருந்து விலகுகிறாரென தெரிவித்தார்.

முன்னதாக, நீதியரசர்கள், ஏ.எச்.எம்.டி நவாஸ், யசந்த கோத்தாகொட மற்றும் ஜனக டி சில்வா ஆகியோர் இதில் இருந்து விலகிக் கொண்டனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பது சட்டவிரோதமானது என கோரி ரிஷாத் பதியுதீன் அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பொருட்களின் இறக்குமதியை நிறுத்த இதுவரை எந்தவொரு முடிவும் இல்லை

கொழும்பு, ஜூலை 06

தற்போது தடை செய்யப்பட்ட பொருட்களைத் தவிர வேறு பொருட்கள் மீதான இறக்குமதியை நிறுத்திவைக்க இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நிதியமைச்சில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நிதியமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் இதனை தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கி அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதியை நிறுத்தி வைக்க முன்மொழிந்துள்ளது என அவர் கூறினார்.

இருப்பினும் தற்போதைய நிலைமையை நிர்வகிக்க வேறு வழிகள் உள்ளன என்றும் அந்த தந்திரோபாயத்தை பயன்படுத்த அரசாங்கம் விரும்புகிறது என்றும் அவர் கூறினார்.

# 20 வயதுக்கு உட்பட்டோருக்க தடுப்பூசி அனுமதி கிடைத்ததும் ஆரம்பமாகும்!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

**கொழும்பு, ஜூலை 06**

**கோவிட்-19 நோய்த் தொற்றுக்கான தேசிய ஆலோசனைக் குழுவின் அனுமதி கிடைத்தால், 20 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு தடுப்பூசிகளை வழங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.**

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

அடுத்த சில வாரங்களில் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கோவிட்-19 தடுப்பூசிகளை வழங்குவதற்கான திட்டங்கள் உள்ளன.

கோவிட்-19 நோய்த்தொற்றுக்கான தேசிய ஆலோசனைக் குழுவின் அனுமதி கிடைத்தால், 20 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு தடுப்பூசிகளை வழங்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தற்போது நாடுமுழுவதும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படுகின்றன. 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மேல் மாகாணத்தில் தடுப்பூசி வழங்கப்படுகின்றன.

தடுப்பூசி அளவுகள் தொடர்ந்து நாட்டிற்கு வந்து கொண்டிருக்கின்றன. எனவே 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் அடுத்த சில வாரங்களில் தடுப்பூசி வழங்கப்படும் - என்றார். (ஐ)

# நம்பிக்கையில்லா பிரேரணை குறித்து கூட்டணி கட்சிகளுடன் பேசியே முடிவு

## சாகர காரியவசம் அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 06

"அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் ஏனைய கட்சிகளுடனும் கலந்துரையாடி எதிர்வரும் நாட்களில் தீர்மானத்தை எடுப்போம். நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவளிப்பதா எதிர்ப்பதா என்பது கூட்டணிக் கட்சித் தலைவர்களுடன் பேசி எடுக்கப்பட வேண்டிய தீர்மானமாகும்" என பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரன அதன்பத்தரமுல்லை நெலும்மாவத்தையில் உள்ள தலைமையகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது;

"அமைச்சர் உதய கம்மன்பில மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து ஏனைய கட்சிகளுடனும் பேச்சு நடத்தி, கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி எதிர்வரும் நாட்களில் தீர்மானத்தை எடுப்போம். இந்த விடயத்தில் மக்களுக்கு நிவாரணம் அளித்தல் ஒன்று, அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளுவது மற்றைய விடயம். எதிர்க் கட்சிகளின் பொறிகளில் சிக்கிவிட நாங்கள் தயார் இல்லை.

இருப்பினும் கட்சி என்கிற வகையில் எமது நிலைப்பாட்டில் உறுதியாகவே இருக்கின்றோம். மக்களுக்காக அன்றி எதிர்கட்சியை நாங்கள் பலப்படுத்த மாட்டோம். நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவளிப்பதா எதிர்ப்பதா என்பது கூட்டணிக் கட்சித் தலைவர்களுடன் பேசி எடுக்கப்பட வேண்டிய தீர்மானமாகும். நாட்டு மக்களுக்காக ஏற்கனவே கூறிய விடயங்களை சரி என்றே நான் இருக்கின்றேன்" என அவர் தெரிவித்தார்.

கேள்வி - வாக்களிக்காமல் இருப்பதா உங்கள் முடிவு?

பதில் - கட்சி என்ற அடிப்படையில் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்ட முடிவுகளில்தான் இன்றும் இருக்கின்றோம். எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிரான நிலைப்பாடாகும். நாடு மிகவும் நெருக்கடியில் உள்ளது. இப்படியான சந்தர்ப்பத்தில் எந்த தரப்பினருக்கும் கலங்கிய நீரில் மீன்பிடிக்க இடமளிக்கமாட்டோம். மிகவும் சிரமப்பட்டு உருவாக்கப்பட்ட இந்த அரசாங்கத்தை குழப்ப இடமளிக்கவும் மாட்டோம்.

கேள்வி - பஸில் ராஜபக்ஷ விரைவில் பாராளுமன்றம் வருகின்ற நிலையில் எரிபொருள் விலை குறைக்கப்படுமா?

பதில் - இது பஸில் ராஜபக்ஷவோ அரசாங்கமோ, சம்பந்தப்பட்ட தரப்பிடம் பேச்சு நடத்தி தீர்மானிக்க வேண்டிய விடயமாகும். எமது அறிக்கையை சரியான முறையில் வாசித்த பின்னர் இதுபற்றி வினவுங்கள். எரிபொருள் விலையேற்றத்தை ஏற்படுத்த இடமளிக்கக்கூடாது என்பதையே அதில் விளக்கியுள்ளேன். இப்படியான சங்கட நிலையில், மக்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளிவிடக்கூடாது. எரிபொருள் என்பது வாகன சாரதிகள் மாத்திரமல்ல, அனைத்து பொருட்கள் சேவைகளுக்கும் தாக்கத்தை அது ஏற்படுத்தும் என்பதால்தான் இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்திருந்தேன். கட்சிக்குள் ஏற்படுகின்ற விடயங்களை உள்ளக ரீதியில் தீர்த்துக்கொள்வோம்.

கேள்வி - விரைவில் அமைச்சரவை மாற்றம் இடம்பெறுமா?

பதில் - கட்சி என்கிற வகையில் எமது நடவடிக்கைகளை எடுக்கின்றோம். அமைச்சரவை நியமிப்பு, கலைப்பு என்பது ஜனாதிபதியின் அதிகாரம் என்பதால் அதில் நாங்கள் தலையிடமாட்டோம்.




# இராணுவ லொறி விபத்தில் சிக்கியது; ஒருவர் உயிரிழப்பு

**6 சிப்பாய்கள் அநுராதபுரம் வைத்தியசாலையில்**

அனுராதபுரம், ஜூலை 06

அனுராதபுரம், பாதெனிய வீதி, மஹவ அம்பகஸ்வெவ பிர தேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். அத்துடன் 6 சிப்பாய் கள் காயமடைந்துள்ளனர்.

இராணுவச் சிப்பாய்கள் பயணித்த லொறியும், எண்ணெய் பவுசர் ஒன்றும் நேருக்கு நேர்மோதி விபத்துக்குள்ளான தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

லொறியில் 7 இராணுவத்தினர் பயணித்துள்ள நிலையில் அறுவர் காயமடைந்த நிலையில் அனுராதபுரம் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ள னர்.

யாழ்ப்பாணத்திலுள்ள இரண்டு இராணுவ முகாம்களைச் சேர்ந்த சிப்பாய்கள் அம்பேபுஸ்ஸ இராணுவ முகாமுக்கு பயிற்சிக்காகச் செல்லும்போதே இந்த விபத்தில் சிக்கியுள்ளனர். விபத்துத் தொடர்பில் மஹவ பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# தெஹிவளை சிங்கத்துக்கு 'அல்பா' வைரஸ் தொற்று!

## மரபணு பரிசோதனையில் கண்டறிவு

கொழும்பு, ஜூலை 06



தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான தோர் என்ற ஆண் சிங்கமானது, பிரிட்டனில் இனங் காணப்பட்ட பி.1.1.7 'அல்பா' வைரஸ் தொற்றினாலேயே பாதிக்கப்பட்டுள்ளது என மருத்துவப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக் கழக வைத்திய பீடத்தின் ஒவ் வொமை நோயெதிர்ப்புப் பிரிவு மற்றும் செல் உயிரியல் பிரிவு நடத்திய பரிசோதனைகளிலேயே, குறித்த சிங்கம் 'அல்பா' வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

ராகமை மருத்துவபீடத்தால் சிங்கத்துக்கு மேற்கொள்ளப் பட்ட மரபணு பரிசோதனையில் சிங்கம் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை ஆரம்பத்தில் தெரியவந்திருந்து.

இதையடுத்து சிங்கம் எத்த கைய வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளது என்பதைக் கண்ட றிவதற்காக ஜயவர்தனபுர பல்கலைக் கழத்தின் மருத்துவ பீடம் மரபணு பரிசோதனையை மேற்கொண்டது. இதன்போது 'தோர்' என்ற சிங்கம் 'அல்பா' வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளமை தெரிய வந்துள்ளது. (இ)

# பாராளுமன்றம் இன்று முதல் 4 நாட்கள் கூடுகிறது

கொழும்பு, ஜூன் 06

இவ்வார பாராளுமன்ற அமர்வை இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரையான 4 நாட்களும் நடத்துவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில்தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

அதற்கமைய, பாராளுமன்றம் இன்று காலை10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதோடு காலை 11 மணிமுதல் மாலை 4.30 மணி வரை குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்த) சட்ட மூலம், சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல்அல்லது தண்டித்தல் என்பவற்றுக்கெதிரான சமவாயம் (திருத்தம்) சட்ட மூலம், குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான ஒரு கட்டளை மற்றும் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பான பிரேரணையும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக செயலாளர்நாயகம் தெரிவித்தார்.

அதனை அடுத்து மாலை 4.50 மணி முதல் 5.30 மணி வரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின்போதான பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். நாளை புதன்கிழமை காலை 11 மணி முதல் மாலை 4.30 மணி வரை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழான 2 ஒழுங்கு விதிகள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்படவுள்ளது. அதேவேளை, அன்றைய தினம் மாலை 4.50 மணி முதல் 5.30 மணி வரை எதிர்க் கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11 மணி முதல் மாலை 4.30 மணி வரை தேருநர்களை பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டமூலம், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பது பல்கலைக்கழகசட்டமூலம், குடிவருவோர் குடியகல்வோர் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. அதனை அடுத்து மாலை 4.50 மணி முதல் 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அதேவேளை, 9 ஆம் திகதி வெள்ளிக் கிழமை இலங்கை மத்திய வங்கியின் 2020 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை தொடர் பான சபை ஒத்திவைப்பு விவாதத்தை காலை 11 மணி முதல்மாலை 5.30 மணிவரை நடத்துவதற்கு இதன்போது தீர்மானிக்கப் பட்டுள்ளது.

மேலும், பாராளுமன்ற அமர்வு இடம்பெறும் நான்கு தினங்களிலும் காலை 10 மணி முதல் 11 மணி வரையான நேரம் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன், வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய மூன்று நாட்களிலும் மாலை 4.30 மணி முதல் 4.50 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின்போதான கேள்விகளுக்கு ஆளும் கட்சி மற்றும் எதிர்கட்சிக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஈழநாடு



# பிளவுக்குள் பலியாகிறது தமிழ் தேசியம்!







**பனங்காட்டான்**

வேகம் கொண்டிருக்கும் கொரோனாவை சாதகப்படுத்தி தங்களின் இலக்கான ஜனநாயக சோசலிச(?) இராணுவ முடியாட்சியை கோட்டாபய தலைமை ஏற்படுத்தி வருகிறது.

இதற்குப் பக்கபலமாக உள்ளும் புறமும் சீனதேசம் உடந்தையாக உதவி புரிகிறது. வெளிப்படையாக சீன இராணுவ சீருடையுடன் தீவின் பல பாகங்களிலும் பன்முக வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இப்போதுள்ள போக்கில் அடுத்த பொதுத்தேர்தல் வரை கொரோனா நெருக்கடியை நீடித்து மற்றைய அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளையும் தொழிற்பாடுகளையும் தடுத்து நிறுத்துவதே ஆட்சித் தரப்பின் திட்டம். அதற்கேற்றாற்போல சகல எதிர்க்கட்சிகளும் சின்னாபின்ன மாக்கப்படுகின்றன.

ராஜபக்ஷ குடும்பத்தின் அடுத்தடுத்த வாரிசுகளை (பஸில், நாமல்) முன்னிலைப்படுத்தி பதவிகளும் ஆசனங்களும் மாளிகைகளும் உருவாக்கப்படுகின்றன. பொதுஜன பெரமுனவை பதவிக்குக் கொண்டு வந்த குட்டிக் கட்சிகளும் பௌத்த தேரர்களும் முடக்க நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

இந்த அரசியல் சீத்துவக்கேட்டில் தமிழர் தரப்பு தனக்குள் மோதுப்பட்டு தங்களை அழித்துக் கொண்டிருக்கிறது. தற்போது தமிழர் தரப்புக்கான தேசிய வழிகாட்டல் என்பது கூட்டா அல்லது தனித்தா அல்லது எதுவுமே இல்லாததா என்பது ஐயப்பாட்டில் உள்ளது.

கடந்தாண்டு ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெற்ற 16ஆவது பொதுத்தேர்தல் தமிழ்த் தேசிய அரசியலில் முக்கிய தீர்மானம் ஒன்றை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது. மாற்றுத் தலைமை, மாற்று அணி என்பவை இந்தத் தேர்தலின் அடிநாதமாக இருந்தன. 2001 ஆம் ஆண்டிலிருந்து 2015ஆம் ஆண்டுவரை இடம்பெற்ற நான்கு பொதுத்தேர்தல்களில் கூட்டமைப்பு என்ற ஒற்றைத் தலைமைக்கு வாக்களித்த மக்கள், 2020 வரையான இருபது ஆண்டுகளை இரு தசாப்தங்களாக பிரித்துப் பார்க்கிறார்கள்.

தமிழர் தாயகம் என்ற தேசியக் கொள்கைக்கு 2004ஆம் ஆண்டுத் தேர்தலிலேயே அதியுச்சமாக 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகினர். விடுதலைப் புலிகளின் பின்னணியே இந்த வெற்றிக்குக் காரணமாக அமைந்தது. 2009 முள்ளிவாய்க்கால் உறைநிலைக்குப் பின்னர் இதில் மாற்றம் ஏற்பட்டது. 2010 தேர்தல் கூட்டமைப்புக்கு 14 பாராளுமன்ற உறுப்பினர்களையும், 2015ஆம் ஆண்டுத் தேர்தல் 16 பாராளுமன்ற உறுப்பினர்களையும் தெரிவு செய்து சரிவு நிலையைக் காட்டியது.

2015இல் பதவிக்கு வந்த மைத்திரிபால - ரணில் தலைமையிலான அரசுடன் கூட்டமைப்பு தேநிலவுக்குப் போனதால் ஏற்பட்ட அதிருப்தியை கடந்த வருட தேர்தல் முடிவு காட்டியது. கூட்டமைப் புக்கு இத் தேர்தலில் பத்து ஆசனங்களே கிடைத்தன.

2004 தேர்தலில் வடக்கில் பதின்மூன்று ஆசனங்களையும், கிழக்கில் ஏழு ஆசனங்களையும் பெற்ற கூட்டமைப்பு, கடந்த வருடத் தேர்தலில் வடக்கில் ஆறு ஆசனங்களையும் கிழக்கில் நான்கு ஆசனங்களையும் மட்டுமே பெறும் நிலைக்கு ஏன் தள்ளப்பட்டது என்பதற்கு பிரேத பரிசோதனை தேவையில்லை. கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை இது.

வயோதிபர் விடுதிக்குச் செல்ல வேண்டிய தலைமைகள், வெளியிலிருந்து எவ்வாறோ உள்ளே தள்ளப்பட்ட கறுத்த ஆடுகள், கட்டுக்கோப்பை உடைத்து சிங்களத்துக்குச் சாமரை வீசப் புறப்பட்ட கருங்காலிகள் என்று கூட்டமைப்பின் பின்னடைவுக்கு பல காரணங்கள் கூறப்படுவதுண்டு.

## ஒன்று கூடுவது ஆரம்பம்!
## சேர்ந்தியங்குவது முன்னேற்றம்!
## ஒன்றிப் பயணிப்பது வெற்றி!

வீட்டுக்குள் சலிப்படைந்து வெளிவந்த வாக்காளர்களும், புதிய இளம் வாக்காளர்களும் ஒரு மாற்றத்தை விரும்பினர். இதனை, மாற்று அணியா - மாற்றுத் தலைமையா என்று நோக்காது, பழையன கழிக என்று இவர்கள் கருதினர். இதனால் கஜேந்திரகுமாரின் தமிழ் தேசிய முன்னணி இரண்டு இடங்களையும், விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஓர் ஆசனத்தையும்பெற முடிந்தது. இது இரு தசாப்தங்களினதும் ஒரு வரலாற்றுப் பதிவு.

இப்போது, தமிழ்த் தேசியம் என்ற பெயரில் மொத்தம் பதின்மூன்று பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் உள்ளனர். இவர்களுக்கு எதிரணியாக ஈ.பி.டி.பி.யின் டக்ளஸ் தேவானந்தாவும் மற்றும் திலீபனும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கஜன் இராமநாதனும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் பிள்ளையான் எனப்படும் சிவனேஸ்வரனும், பொதுஜன பெரமுனவின் வியாழேந்திரனுமாக ஐவர் வடக்கு, கிழக்கிலிருந்து தெரிவாகியுள்ளனர். இவர்கள் ஐவரும் அரசாங்கத்தில் ஏதோவொரு பதவியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

தமிழர் பிரச்னைத் தீர்வுக்கான பதின்மூன்றாவது அரசியல் திருத்தம், புதிய அரசியலமைப்பு, தமிழர் அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றம், போர்க் குற்ற பொறுப்புக்கூறலும் சர்வதேச நீதி விசாரணைப் பொறிமுறையும், இலங்கை மீதான ஜெனிவாத் தீர்மானம், ஐரோப்பிய ஒன்றிய தீர்மானம், அமெரிக்க காங்கிரஸ் பிரேரணை என்பவற்றை தமிழ் மக்கள்இப்போது கூர்மையாகப் பார்க்கின்றனர்.

இவ்விடயங்கள் தொடர்பாக தமிழர் தரப்பில் எந்தத் தலைமையுடன் உள்நாடுகளிலும் வெளிநாடுகளிலும் - சர்வதேச ரீதியாகவும் பேச்சு நடத்த வேண்டுமென்ற கேள்வி கடந்த சில வாரங்களாக முனைப்புப் பெற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது. ஒரே வார்த்தையில் கூறுவதானால், தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் மட்டும் பேச்சு நடத்துவது முறையா? அதற்கான தகுதியை கூட்டமைப்பு தக்க வைத்துள்ளதா என்ற வினாக்களே இன்று எழும்பியுள்ளது.

இங்கிலாந்திலிருந்து ஒலிபரப்பாகும் 'உயிரோடை' தமிழ் வானொலியின் கடந்த வார அரசியல் களம் நிகழ்ச்சியில் இது தொடர்பாக விரிவாக ஆராயப்பட் டது. தமிழ்த் தேசிய கோட்பாட்டின் அடிப்படையில் தெரிவான பதின்மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட மூன்று கட்சிகளையும் சேர்த்தே எந்தப் பேச்சும் இடம் பெற வேண்டுமென்ற கருத்து இக்களத் தில் வலியுறுத்தப்பட்டது,

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஈழநாடு தினசரியின் கடந்த ஜூன் 30, ஜூலை 1 ஆம் திகதிய பதிப்புகளின் "இப்படியும் நடக்கிறது" என்னும் பத்தியில் இதே விடயம் முக்கியமாக எடுத்தாளப்பட்டது. "தமிழ் மக்களின் நம்பிக்கையை இழந்து விட்ட பின்னரும் கூட்டமைப்பு தானே தமிழ் மக்க ளின் ஏகபிரதிநிதிகள் போல தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அவர்கள் தரப்பில் அதிகம் பேர் இருக்கிறார்கள் என்பதற்காக அவர்கள் ஏகப்பிரதிநிதிகள் அல்லர்..." என்பது இப்பத்தியை எழுதும் ஊர்க்குருவியின் கருத்து.

இக்கருத்துடன் பனங் காட்டான் கருத்தும் ஒத்துப் போவதால் இதனையே இங்கு சற்று ஆழமாகப் பார்க்க நேர்கிறது.

2001, 2004, 2010, 2015 தேர்தல்களில் தமிழர் தாயக மக்கள் கூட்டமைப்புக்கே தங்கள் வாக்கை அள்ளிப் போட்டு தமிழர் தரப்பின் கூடிய எம்.பி.க்களை பாராளுமன்றம் அனுப்பினர். அவ்வேளையில் கூட்டமைப்பி னர் தங்களைத் தாங்களே தமிழரின் ஏகப்பிரதிநிதிகள் என அழைத்தனர்.

ஆனால், 2020 தேர்தல் முடிவு முன்னர்போல அமையவில்லை. கஜேந்திரகுமார் முன்னணிக்கும், விக்னேஸ்வரன் கூட்டணிக்கும் ஆசனங்கள் கிடைத்ததால் கூட்டமைப்பு தொடர்ந்து தனித்தலைமை, ஏகத்தலைமை என்று கூறமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மறுதரப்பில் கஜேந்திரகுமார் பாராளுமன்றத்தில் அவ்வப்போது ஆணித்தரமாக உரைகளை நிகழ்த்துவதாலும், தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி பாணியில் விக்னேஸ்வரன் கேள்வி - பதிலை எழுத்தில் வடிப்பதாலும் மாற்றுத் தலைமைக்கு வாக்களித்தவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர் என்பதையும் கவனிக்கக் கூடியதாகவுள்ளது.

ஜனாதிபதி என்ற கோதாவில் அண்மையில் கோட்டாபய ராஜபக்ஷ கூட்டமைப்பினரை சந்திப்பதாக இருந்தது. ஆனால், பின்னர் அது இரத்தானது (இராணுவ ஆட்சி என்றால் இப்படித்தான்). அதேசமயத்தில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே கூட்டமைப்பினரை அழைத்து பேச்சு நடத்தினார். சம்பந்தன் தலைமையில் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் மூவருடன் சுமந்திரனும் இதில் கலந்து கொண்டார். வழமையான பதின்மூன்றாவது திருத்த அமுலாக்கம் தொடர்பாக இந்தியா உறுதியளித்ததாக செய்திகள் வந்தன.

தமிழர் தரப்பு ஒற்றுமையாக ஒன்றுபட்டு ஒரே குரலில் இயங்க வேண்டுமென்று இந்தியத் தூதுவர் கூட்டமைப்பினருக்கு ஆலோசனை வழங்கியதாகவும் ஒரு தகவல். இதனை நம்பி ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எடுத்த முயற்சியை மாவை. சேனாதிராஜாவும் சுமந்திரனும் திட்டமிட்டு இல்லாமலாக்கினரென இன்னொரு தகவல்.

எதுவாயினும், இங்கு கவனிக்கப்பட வேண்டிய அடிப்படை விடயம், கூட்டமைப்பு - கஜேந்திரகுமாரின் முன்னணி - விக்னேஸ்வரனின் கூட்டணி ஆகிய மூன்றும் தமிழ் மக்களின் அடிப்படை விடயங்களில் ஒரே குரலில் இயங்க வேண்டியது அவசியமாகிறது என்பதாகும். தமிழர் தரப்பை ஒரே குரலில் பேசுங்கள் என்று அறிவுரை கூறும் இந்தியத் தரப்பு, பேச்சு என்று வரும்போது கூட்டமைப்பை மட்டும் அழைத்துவிட்டு ஒற்றுமை பற்றிப் பேசுவதில் என்ன நியாயம்?

சிங்கள ஆட்சித் தரப்பினரும், தமிழரின் அரசியல் அபிலாசைகள் மற்றும் நாளாந்த விவகாரங்கள் பற்றி உரையாட கூட்டமைப்பை மட்டும் தனித்து அழைக்காமல் தமிழ்த் தேசியம் சார்ந்த பதின்மூன்று எம்.பிக்கள் தரப்பினரையும் அழைக்க விரும்பாதது ஏன்? (கூட்டமைப்பை இலகுவாக கைப்பிள்ளையாக்கி விடலாமென்ற நம்பிக்கையா?)

தாங்கள் இப்போது தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் இல்லையென்பதை கூட்டமைப்பினரும் உணர வேண்டும். எனவே, தமிழர் தரப்புடன் பேசவென தங்களை எவர் அழைத்தாலும், கஜேந்திரகுமார் மற்றும் விக்னேஸ்வரன் அணியையும் சேர்ந்து அழைக்குமாறு இவர்கள் வலியுறுத்த வேண்டும்.

கூட்டமைப்பு எனும் ஒரேயொரு தரப்பினருடன்தான் பேசுவோம் என சிங்கள அரசாங்கமோ அல்லது இந்தியத் தரப்போ கூறுமானால், அது தமிழர் தரப்பின் ஒற்றுமையின்மையை விரும்புகிறார்கள் என்றும், தமிழர் தரப்பை பிளவுபடுத்தவே முயற்சிக்கிறார்கள் என்றும் அர்த்தம் கொள்ள வேண்டியுள்ளது. கூட்டமைப்பினரும் தங்களை மட்டும்தான் பேச்சுக்கு அழைக்க வேண்டுமென்ற ஏகத்தலைமைக் கனவை அகற்ற வேண்டும். ஜெனிவாவுக்கு முதற்கடிதம் அனுப்பும் போதும், காணாமலாக்கப்பட்டவர்கள் விடயமாக அரசுடன் பேசும் போதும் பொதுப்பிரச்சனை அடிப்படையில் இணைந்த முத்தரப்பினராலும், தொடரும் அரசியல் அபிலாசைகள் விடயத்தில் ஏன் இணைந்து செயல்பட முடியாது? ■

# இணைய கற்றல் வள நிலையங்கள் மாணவர் தேவையை ஈடுசெய்யுமா?

**அன்றாட கூலிக்கு வேலை செய்து வருபவர்களுக்கு தற்போதைய கொரோனா கட்டுப்பாடுகள் பெரிய அடி எனும் நிலையில் அவர்கள் குடும்பத்திற்கு இணைய வழி கல்வி என்பது பேரிடியாகவே காணப்படுகிறது. அதற்குப் பரிகாரமாக கல்வியமைச்சு பிரதேச கற்றல் வள நிலையங் களை அறிமுகப்படுத்தி பின்தங்கிய மாணவர்களுக்கு கற்றலுக்கான வசதியை ஏற்படுத்துகின்றது.**



**வி.ரி.சகாதேவராஜா**



நாட்டின் கல்வி வரலாற்றில் முதல்தடவையாக 2,000 பிரதேச கற்றல்வள நிலையங்கள் ஆரம்பமாகியுள்ளன. கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்டு இணைய வழிக் கல்வியினை முன்னெடுக்கமுடியாத மாணவர்களுக்காக இப்புதிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோவிட் தொற்றானது தற்போது உலகின் பல நாடுகளை முடக்கி வைத்துள்ளது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருப்பது யாவரும் அறிந்த விடயமே. இந்த நிலையில் இலங்கையிலும் கோவிட் தொற்று அச்சம் காரணமாக பிறப்பிக்கப்பட்டுள்ள பயணத்தடையால் பலரின் அன்றாட வேலைகள் ஸ்தம்பித்துள்ளன.

அத்துடன் மாணவர்களின் கல்வி நிலையும் கேள்விக்குறியாகவே உள்ளது. பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில் இணைய வழியாக கற்றல் மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் சில மாணவர்கள் நன்மையடைந்துள்ள போதும் பல மாணவர்கள் அதிலும் குறிப்பாக வறுமையான குடும்பத்தை சேர்ந்த மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வனைத்திற்கும் பிரவேசிக்க முடியாத சிக்கல் நிலைமை நாட்டின் 12வீதம் அல்லது அதற்கு சற்று அதிகமான தரப்பினரைப் பாதித்துள்ளது.

இணையவழி கற்கைக்கு தேவையான ஸ்மார்ட் தொலைபேசி கணனி அல்லது மடிக்கணனி போன்றவை இல்லாமலும் அப்படியே அவை இருந்தாலும் கூட, வகுப்பினை மேற்கொள்வதற்கான டேற்றா (DATA) போடுவதற்கான பணம் இன்றி அவதிப்படும் நிலை நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

பல மாணவர்கள் தமது பிரதேசங்களில் சமிக்ஞை தழுவல்நிலை (Coverage) இல்லாத காரணத்தால் பலமைல்தூரம் நடந்துவந்து பஸ்தரிப்பு நிலையங்களிலும் வேறிடங்களிலும் கூரைகளிலும் அமர்ந்திருந்து கற்றதையும் ஊடகங்கள் வாயிலாக காணமுடிந்தது. பயணத்தடை காரணமாக உழைப்பின்றி கால் வயிறு கஞ்சிக்கே அல்லல்படும் நிலையிலுள்ள குடும்பங்களுக்கு இணைய வழியான கல்வியானது எட்டாக்கனியாகவே உள்ளது.

அன்றாட கூலிக்கு வேலை செய்து வருபவர்களுக்கு இந்த பயணத்தடை பெரிய அடி எனும் நிலையில் அவர்கள் குடும்பத்திற்கு இணைய வழி கல்வி என்பது பேரிடியாகவே காணப்படுகிறது. அதற்குப்பரிகாரமாக கல்வியமைச்சு நேற்று திங்கட்கிழமை முதல் பிரதேச கற்றல் வளநிலையங்களை அறிமுகப்படுத்தி பின்தங்கிய மாணவர்களுக்கு கற்றலை ஏற்படுத்த வசதிசெய்துள்ளது.

கோவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக தற்போது பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் இணையவழி தொலைக்கல்வி வழிமுறையினூடாக இடம்பெறுகின்ற போதிலும் பல்வேறான காரணங்களால் அந்த வசதிகளைப் பெறமுடியாத மாணவர்களுக்காக 'பிரதேச கற்றல் நிலையங்களை' நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் இணையவசதிகளுடைய குறித்த நிலையங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்திருந்தார்.

அதற்கமைய நேற்று திங்கட்கிழமை முதல் நாடளாவியரீதியில் 2000 பிரதேச கற்றல்வள நிலையங்கள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து செயற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கான சகல ஏற்பாடுகளையும் அந்தந்த மாகாண வலயக்கல்விப்பணிமனைகள் செய்திருந்தன.

மஹிந்தோதய ஆய்வகங்கள், வணக்கஸ்தலங்களில் நடத்திச்செல்லப்படும் கல்வி நிலையங்கள், சமூக அரங்குகளில் நடத்திச் செல்லப்படும் கல்வி நிலையங்களில் இதுபோன்ற இணைய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத் தலைவர்கள், கல்வி வலயங்களின் பணிப்பாளர்கள், அதிபர்கள் ஆகியோர் குறித்த இடங்களை அடையாளப்படுத்தியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், கோவிட் - 19 தொற்று நோய் நிலைமையின் கீழ் பாடசாலைகள் திறக்கப்படாமையின் காரணமாக தற்போது கற்றல் நடவடிக்கைகள் தொலைக் கல்வி/இணையவழி முறைமையிலேயே இடம்பெறுகின்றன. அதேவேளை குருகுலம், ஈ -தக்சலாவ மூலமாக பிள்ளைகளுக்கான கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

அத்துடன் மாகாண, கோட்டகல்வி, பாடசாலை மற்றும் வகுப்புக்கள் என்ற அடிப்படையில் சமூக ஊடகங்கள் மற்றும் அச்சு ஊடகங்கள் வாயிலாக பெருமளவிலான நிகழ்ச்சிகள் உரிய விடயதான பணிப்பாளர்களின் மேற்பார்வையின் கீழ் நடத்தப்படுகின்றன. எனினும் இவ்வனைத்திற்கும் பிரவேசிக்க முடியாத சிக்கல் நிலைமை நாட்டின் 12% அல்லது அதற்கு சற்று அதிகமான தரப்பினரைப் பாதித்துள்ளது.

அதனடிப்படையில் கல்வி அமைச்சானது, பிரதேச கற்றல் நிலையங்களை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடந்த 17 ஆம் திகதி சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளது. சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக சிறு குழுக்களாக ஒன்றுகூடக் கூடிய இடங்களில் கிராமிய ரீதியாக ஆரம்பிப்பதற்கு கல்வி மறுசீரமைப்பு திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவை இராஜாங்க அமைச்சு மற்றும் டிஜிட்டல் தொழிநுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு ஆகியன இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன.

அந்த நிலையங்கள் காலை 7.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணிவரையில் திறந்து வைக்கப்படவுள்ளன. அந்த நிலையங்கள் ஆகக் குறைந்தது 10 கணினிகள், மடிக்கணினிகள் மற்றும் டெப் கணினிகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். அதன் செயற்பாடுகள் பற்றியதான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் வலய மட்டத்திலும் மேற்பார்வை மற்றும் வழிகாட்டல்கள் மாகாண மட்டத்திலும் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை கொரோனா அச்சம் காரணமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளை இந்த மாத இறுதிக்குள் மீளத்திறக்க எதிர்பார்ப்பதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அறிவித்துள்ளார். பாடசாலைகள் திறக்கப்பட முன் அனைத்து ஆசிரியர்களுக்கும் தடுப்பூசி நிச்சயம் அளிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

50 மாணவர்களுக்கும் குறைவான 1,439 பாடசாலைகள் 50 தொடக்கம் 100 மாணவர்கள் வரையான 1523 பாடசாலைகள் என 2,962 பாடசாலைகளை மீளத்திறக்க உத்தேசித்திருப்பதாகவும் சுகாதார நிபுணர்களின் கருத்துக்களைப் பெற்றவுடன் இறுதி முடிவை எடுப்பதாகவும் கல்வியமைச்சர் தெரிவித்தார். அதன்படி 100 இற்கும் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை இந்த மாதத்திற்குள் திறப்பது குறித்து அவதானம் செலுத்துவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மறுபுறம் நாட்டின் 10 மாவட்டங்களில் உயர் வலுவுடைய தொலைத் தொடர்பாடல் கோபுரங்கள் அமைக்கப்படும் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தெரிவு செய்யப்பட்ட 10 மாவட்டங்களில் உள்ள கிராமிய பிரதேசங்களில் இந்த தொலைத் தொடர்பாடல் கோபுரங்கள் அமைக்கப்பட இருப்பதாகவும் அமைச்சர் கூறினார். ஒன்லைன் மூலம் கற்றுவரும் மாணவர்களுக்கு எந்தவித தடையும் இன்றி இலகுவான முறையில் கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும்.

இந்தப் பிரதேசங்களில் முதலில் தொலைத் தொடர்பாடல் கோபுரங்கள் நிறுவப்பட வேண்டும் என்பது பற்றி கவனம் செலுத்துமாறு தான் இலங்கை தொலைத் தொடர்பாடல் ஒழுங்குறுத்தல் ஆணைக்குழுவுக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

மொத்தத்தில் பாடசாலைகள் முறைப்படி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரான காலப்பகுதியில் இத்தகைய கற்றல்வள நிலையங்களை ஆரம்பித்து நடத்துதல் வரவேற்புக்குரியது.

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை - 1 வினாத்தாள் I
நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - மு.வே.அன்பழகன்

## இல - 8 வினாத்தாள் - I விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 11. 2 | 21. 1 | 31. 1 |
| 2. 2 | 12. 4 | 22. 2 | 32. 1 |
| 3. 2 | 13. 3 | 23. 2 | 33. 1 |
| 4. 3 | 14. 2 | 24. 3 | 34. 3 |
| 5. 1 | 15. 3 | 25. 2 | 35. 2 |
| 6. 2 | 16. 2 | 26. 3 | 36. 3 |
| 7. 3 | 17. 2 | 27. 1 | 37. 1 |
| 8. 1 | 18. 3 | 28. 2 | 38. 2 |
| 9. 3 | 19. 2 | 29. 1 | 39. 2 |
| 10. 1 | 20. 2 | 30. 3 | 40. 1 |

40x2.5 = 100 புள்ளி

## இல - 8 வினாத்தாள் - II விடைகள்





01.
i) ஓவியங்கள்
ii) மோனாலிசா
iii) அழகு
iv) அமைதி
v) தூண்டுபவை
vi) விருந்து + அளிப்பவை (6 புள்ளி)
02.
1. அலைந்து 2. மலர்ச்செண்டு (2 புள்ளி)
03.
1. அடிமை 2. தற்புகழ்ச்சி (2 புள்ளி)
04. (அ) 1. ✘ ✓
(ஆ) பாடினோம் 2. அசைந்தாடின
(4 புள்ளி)
05. (i) ஊண் (ii) வலி (2 புள்ளி)
06. குண்டு, வடவை (2 புள்ளி)
07. 3 (2 புள்ளி)
08. சிரமம், தானம், தாரம், சினம் (2 புள்ளி)
09. (i) மடக்கேறு (ii) கீழ்க்கால்
(2 புள்ளி)
10. (i) திறமையுள்ளவன் எதனையும் எளிதிற் சாதிப்பான்
(ii) நல்லதை இருக்க தீயதை நாடுதல்
11. 1) butterfly 2) brinjal
3) Lotus / flower (3 புள்ளி)
12. i) ஊங்கள் கைகளைத் தட்டுங்கள்
ii) உங்கள் பாடசாலை எங்கே இருக்கிறது?
iii) நாங்கள் நூலகத்திற்குப் போவோம்
(3 புள்ளி)





13. அப்பி வதுர பொமு (1 புள்ளி)
14. நன்றி மீண்டும் வாருங்கள் (1 புள்ளி)
15.

| | | | |
|---|---|---|---|
| 1) 3 | 10) 1 | 19) 3 | 28) 2 |
| 2) 2 | 11) 3 | 20) 1 | 29) 2 |
| 3) 3 | 12) 4 | 21) 1 | 30) 4 |
| 4) 2 | 13) 1 | 22) 3 | |
| 5) 4 | 14) 1 | 23) 2 | |
| 6) 2 | 15) 2 | 24) 4 | |
| 7) 2 | 16) 3 | 25) 2 | |
| 8) 2 | 17) 2 | 26) 4 | |
| 9) 3 | 18) 3 | 27) 2 | |



(30 புள்ளி)
16. பொருத்தமான வாக்கியங்கள் (6 புள்ளி)
17. 1) இருபதாயிரத்து அறுநூற்று நாற்பத்தைந்து
2) i. XVI ii. XXIV
3) i 7/10 ii. 0.3
4) 13 : 15 மணித்தியாலம் 5) 12
6) 5.5 cm / 5cm 5mm
7) 840 8) i) 184 ii) 138
9) நேரம் 2.25 ஐக் குறித்தல்
10) 3/4 11) 80cm 12) 138km
13) i) 32cm
ii) 28cm / 28 சதுர சென்ரிமீற்றர்
14) 61kg 250g
15) i) 595 ரூபாய் ii) 4450 ரூபாய்
(30 புள்ளி)

❖ கீழே தரப்பட்டுள்ள 1 ஆம் 2 ஆம் வினாக்களுக்கு முதலில் தரப்பட்டுள்ள உருவின் மிகப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.





01. 
1)  2)  3) 

02. 
1)  2)  3) 

❖ தரப்பட்டுள்ள இரண்டு உருக்களினை நன்கு அவதானித்து உரு A க்கும் உரு B க்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் எத்தனை?

03. 
A

B
1) 2 2) 4 3) 3

04. கீழே தரப்பட்டுள்ள கூட்டத்தினுள் உள்ளடங்கக் கூடிய உருவைத் தெரிவு செய்க.


1)  2)  3) 

05. தரப்பட்டுள்ள சொற்களுள் ஒரு சொல் வேறுபட்டுள்ளது. அச் சொல்லைத் தெரிவு செய்க.
அம்புலி , நிலா , சந்திரன் , இந்திரன் , மதி
1) அம்புலி 2) சந்திரன் 3) இந்திரன்

06. இங்கு தரப்பட்டுள்ள சொற்கூட்டங்களில் இரண்டு சொற்கள் ஒரு கூட்டமாகவும், மூன்று சொற்கள் ஒரு கூட்டமாகவும் அமைக்கும்போது ஒரு சொல் வேறுபட்டு இருக்கும். அச் சொல்லைத் தெரிவு செய்க.

திங்கள் , பங்குனி , வைகாசி , சனி , செவ்வாய் , யுரேனஸ்


1) திங்கள் 2) பங்குனி 3) சனி

07. | A | C | E | → | B | D | F | எனின்

| i | iii | v | → | | | | இடைவெளிக்குப் பொருத்தமானது.

1) | ii | iv | v | 2) | ii | iv | vii | 3) | ii | iv | vi |

08. 799, 777, 37491 எண்களை இடமிருந்து வலமாகவும், 387, 479 ஆகிய எண்களை மேலிருந்து கீழாகவும் அமையுமாறு கட்ட வலையமைப்பை நிரப்பினால் 5 ஆவது நிரலில் மேலிருந்து கீழாக அமையும் எண் யாது?


1) 97 2) 17 3) 79

# கட்சியை பலப்படுத்தும் ரணிலின் ஆட்டம் ஆரம்பம்

## ஐவரடங்கிய குழுவும் அமைப்பு

**கொழும்பு, ஜூலை 06**

**ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைத்து, கட்சியை வலுப்படுத்துவதற்குத் தேவையான விடயங்களை ஆராய்ந்து பரிந்துரைகளை முன்வைப்பதற்காக கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் ஐவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.**





கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன, தவிசாளர் வஜிர அபேவர்த்தன, பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, உப தலைவர்களான அகிலவிராஜ் காரியவசம் மற்றும் சாகல ரத்நாயக்க ஆகியோர் இந்த குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஐ.தே.கவின் கீழ்மட்ட அரசியலை மீண்டும் பலப்படுத்தல், 1977 காலப்பகுதியில் இருந்த வாறே கட்சி கட்டமைப்பை பலப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் மேற்படி குழு மூன்று மாத காலப்பகுதிக்குள் பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# பஸிலை விமர்சித்த சு.கவுக்கு பொதுஜன முன்னணி பதிலடி

## தயாசிறியை விளாசித்தள்ளினார் ரோஹித

கொழும்பு, ஜூலை 06

“அங்கும் இங்குமாக தஞ்சம் புகுந்து அரசியல் நடத்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் - இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி கிடைக்காததாலேயே பஸில் ராஜபக்ஷவை விமர்சிக்கும் அரசியலை முன்னெடுத்துவருகின்றார். இணைந்து பயணிப்பதானால் கூட்டுப் பொறுப்பு என்னவென்பதை அவரின் கட்சி உணரவேண்டும்.” என்று கடும் சீற்றத்துடன் பதிலடி கொடுத்துள்ளது அரச கூட்டணியின் தலைமைக் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி.

‘பஸில் ராஜபக்ஷ மற்றும் பி.பீ. ஜயசுந்தர ஆகியோரின் நிகழ்ச்சி நிரலுக்கமையவே தற்போதைய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது. இது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அமைச்சரவை அல்ல. சட்டிமுட்டி, பற்றிக் என நகைச்சுவைத்தனமாக, இராஜாங்க அமைச்சுகளைக் கூட பஸிலே உருவாக்கினார். அவர் பாராளுமன்றம் வருவதால் மாற்றம் ஏதும் ஏற்படப்போவதில்லை’ என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி. கருத்து வெளியிட்டிருந்தார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ‘மொட்டு’ கட்சியின் உறுப்பினரான அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன மேற்கண்டவாறு விளாசித்தள்ளினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“பஸில் ராஜபக்ஷதான் அமைச்சரவையை உருவாக்கினார் என்பது உட்பட மேலும் சில குற்றச்சாட்டுகளை தயாசிறி ஜயசேகர முன்வைத்துள்ளார். தயாசிறி ஜயசேகர என்பவர் கடந்த ஆட்சியின்போது அமைச்சரவையில் விளையாட்டுத்துறை அமைச்சுப் பதவியை வகித்தவர். இதன்போது விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கும், தவறான திசையில் பயணித்த அரசை நல்வழிப்படுத்துவதற்கும் அவர் முன்னெடுத்த திட்டங்கள் எவை எனக் கேட்க விரும்புகின்றோம். அப்போது எதுவும் செய்யாமல் - முடியாமல் மௌனமாக இருந்தவரே இன்று அறிவிப்புகளை விடுக்கின்றார்.

2015 ஜனவரி 08 ஆம் திகதி வரை மஹிந்த ராஜபக்ஷவின் பக்கம் இருந்தார். 2015 ஜனவரி 09 ஆம் திகதி காலை மைத்திரி பக்கம் சென்றுவிட்டார். அமைச்சர் பீரிஸின் செயலாளராக இருந்த தயாசிறி அதன்பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்தார். அதன்பின்னர் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சென்றார். மீண்டும் சுதந்திரக் கட்சிக்கு வந்தார். இவ்வாறானவர்களின் அரசியல் என்னவென்பது மக்களுக்குத் தெரியும். தமது இயலாமையை மூடிமறைக்கவே பிறர் மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.

கடந்த பொதுத்தேர்தலில் களுத்துறை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிட்டது. களுத்துறை மாவட்டத்தில் 10 ஆயிரத்து 977 வாக்குகளும், நுவரெலியா மாவட்டத்தில் 6 ஆயிரத்து 277 வாக்குகளுமே கிடைக்கப் பெற்றன. சிலவேளை அனைத்து மாவட்டங்களிலும் அக்கட்சி தனித்துப் போட்டியிட்டிருந்தால் தேசியப்பட்டியல் ஊடாக மட்டுமே ஐ.தே.கவுக்குப் போன்று ஓர் ஆசனம் கிடைத்திருக்கும்.



சுதந்திரக் கட்சிக்குள் பிரச்னையெனில் அரசுக்குள் இருப்பதாக இருந்தால் பிரச்னையை உள்ளே பேசித் தீர்க்கலாம். அதனைவிடுத்து வெளியில் விமர்சிப்பது ஏற்புடையது அல்ல. சிலருக்குக் குணப்படுத்த முடியாத நோய் உள்ளது. அதில் ஒருவர்தான் விஜயதாஸ ராஜபக்ஷ. அமைச்சுப் பதவி இல்லாவிட்டால் அவரால் இருக்க முடியாது. இரண்டாவது நபர்தான் தயாசிறி.

பஸில் ராஜபக்ஷ என்பவர் இந் நாட்டில் பலம் பொருந்திய கட்சியைக் கட்டியெழுப்பியவர். பொருளாதாரப் போரை வென்றவர். அவரின் வருகை நிச்சயம் மாற்றத்தைத் தரும். பஸில் என்பவர் வேலை செய்யும் தலைவர் என்பது எதிரணிக்குக்கூட தெரியும். பஸிலை அரசியல் ரீதியில் விமர்சித்ததால்தான் தயாசிறியை நாம் விமர்சிக்க வேண்டி வந்தது. இணைந்து பயணிக்க நாம் தயார். ஆனால், இணைந்து பயணிப்பதாக இருந்தால் கூட்டுப்பொறுப்பை உணருமாறு வலியுறுத்துகின்றோம்” - என்றார். (இ)




# நேற்று அதிகாலை வந்தன 26,000 பைசர் தடுப்பூசிகள்!

கொழும்பு, ஜூலை 06

இலங்கை கொள்வனவு செய்த முதலாம் தொகுதி பைஸர் தடுப்பூசிகள் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை 26 ஆயிரம் பைஸர் தடுப்பூசிகள் நாட்டுக்குகே கொண்டுவரப்பட்டன என்று மருந்து உற்பத்திகள் வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

அமெரிக்காவில் இருந்து டோஹாவுக்கு கொண்டுவரப்பட்ட குறித்த தடுப்பூசிகள், கட்டார் விமான சேவையின் கிவ். ஆர். 663 என்ற விமானத்தின் மூலம் நேற்று அதிகாலை 2.15 மணியளவில் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதற்கமைய, தெற்காசிய பிராந்தியத்தில் பைஸர் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டுள்ள முதலாவது நாடு இலங்கையாகும் என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“மறை 70 பாகை செல்சியஸ் வெப்பநிலையில், பைஸர் தடுப்பூசிகளைக் களஞ்சியப்படுத்த வேண்டும். எனவே, இதனைப் பயன்படுத்துவதற்கு விசேட ஏற்பாடுகள் அவசியமாகும்.

இதற்கமைவான களஞ்சிய வசதிகளை, அரச மருந்தகக் கூட்டுத்தாபனமும், நாரஹேன்பிட்டியிலுள்ள தேசிய இரத்த மாற்று சேவையும் இணைந்து களஞ்சிய வசதிகளை மேம்படுத்தியுள்ளன.

இதனை ஆராய்ந்த பைஸர் நிறுவனம், இலங்கை தமது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியானது என அனுமதி வழங்கியது” - என்றார். (இ)

# ‘கொரோனா’வின் தீவிரத்தால் மேலும் ஒரு பிரதேசம் முடக்கம்

கொழும்பு, ஜூலை 06

கொரோனா வைரஸ் தொற்றின் தீவிரத்தால் மேலும் ஒரு பிரதேசம் நேற்று காலை 6 மணி முதல் அமுலாகும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, களுத்துறை மாவட்டத்தின் களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடா வஸ்கடுவ மேற்கு கிராம சேவகர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை கொரோனாப் பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

இதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்தின் கொலொன்ன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாபனே கிராம சேவகர் பிரிவு இன்று காலை தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# 15 வயது சிறுமி விற்பனை: மேலும் நால்வர் சிக்கினர்!

கொழும்பு, ஜூலை 06

“15 வயதான சிறுமியை இணையத்தளம் மூலம் விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் மேலும் 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.”

- இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“வேறோர் இணையத்தளத்தில் சிறுமியை விற்பனை செய்வதற்காக விளம்பரத்தை பிரசுரித்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், குறித்த சிறுமியை இணையத்தளத்தின் மூலம் பணம் கொடுத்து வாங்கியதற்காக மாலைதீவு பிரஜை ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்வதற்கு அறையொன்றை வழங்கிய விடுதியொன்றின் முகாமையாளர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்” - என்றார்.

சிறுமி விற்பனை விவகாரம் தொடர்பில் இதுவரை 30 இற்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# 16 மாத கால கட்டுப்பாடுகள் கனடாவில் நேற்றுமுதல் தளர்வு

*றொறன்ரோ, ஜூலை 06*

கொரோனா வைரஸ் தொற்று நோயைக் கட்டுப்படுத்த கனடாவில் கடந்த 16 மாதங்களாக நடைமுறையிலிருந்த கட்டுப்பாடுகள் நேற்று முதல் மெல்லத் தளர்த்தப்பட்டன.

எனினும், குறிப்பிட்ட சில தரப்பினருக்கு மட்டுமே கட்டுப்பாட்டு தளர்வுகள் உடனடியாக நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட கனடியர்கள் மற்றும் நிரந்தர குடியிருப்பாளர்கள் நேற்று முதல் வெளிநாடுகளுக்குச் சென்றுவரும்போது 14 நாள் தனிமைப்படுத்தலைத் தவிர்க்க முடியும்.

அத்துடன், இரண்டு தடுப்பூசிகளையும் விமானப் பயணிகளுக்கு கனடா அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விடுதிகளில் மூன்று நாட்கள் தனிமைபடுதிக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

பயணம் செய்யும் கனேடியர்கள் முழுமையாக தடுப்பூசி போட்ட ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன், பயணத்துக்கு மூன்று நாட்களுக்குள் எடுத்த கோவிட் தொற்றில்லை என்ற அறிக்கையையும் காண்பிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)



## பாப்பரசருக்கு சத்திர சிகிச்சை!

*வத்திக்கான்சிற்றி, ஜூலை 06*

பாப்பரசர் பிரான்சிஸ் சத்திரி சிகிச்சைக்காக ரோமில் உள்ள கெமெல்லி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் (வயது 84) பெருங்குடல் சுருக்கம் காரணமாகப் பாதிக்கப்பட்டார். அவருக்கு சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் ஆலோசனை வழங்கினர்.

இதையடுத்தே அவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மருத்துவமனைக்கு செல்ல முன்னர், பாப்பரசர் ஞாயிறு வழிபாட்டில் பங்கேற்றார். மக்களுக்கு ஆசி வழங்கிய பாப்பரசர் சத்திர சிகிச்சை குறித்து எதையும் வெளிப்படுத்தாமல் தமக்காகப் பிரார்த்திக்குமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதன் பின்னரே அவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்ந்தார். எனினும், அவருக்கு எப்போது சத்திர சிகிச்சை நடத்தப்படும் என்ற விவரம் வெளிப்படுத்தப்படவில்லை. எனினும், சிகிச்சை முடிந்ததும் அறிவிக்கப்படும் என்று வத்திக்கான் நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஐ)

## ஆப்கானிலிருந்து நேட்டோ படைகள் முழுமையாக வெளியேற வேண்டும்!

### தலிபான்கள் எச்சரிக்கை

*காபூல், ஜூலை 06*

ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகளாக நிலைகொண்டுள்ள நேட்டோ படைகள், தாங்கள் அளித்த செப்ரெம்பர் மாத கெடுவுக்குள் முழுதாக நாட்டை விட்டு வெளியேறி விடவேண்டும். இதன் பின்னர், ஆப்கானிஸ்தானில் இருக்கும் வெளிநாட்டுப் படையினர் ஆக்கிரமிப்பாளர்களாக கருதப்படுவர் என்று தலிபான்கள் எச்சரித்துள்ளனர்.

தூதரகங்களையும், காபூல் சர்வதேச விமான நிலையத்தையும் பாதுகாக்க முக்கியமாக அமெரிக்கத் துருப்புகளைக் கொண்ட 1,000 படையினர் கெடுவுக்குப் பிறகும் ஆப்கானிஸ்தானில் தங்கியிருப்பார்கள் எனக் கருத்துக்கள் வெளியான நிலையில் தலிபான்கள் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

டோகா உடன்படிக்கைக்கு மாறாக செப்ரெம்பர் மாதத்துக்கு பின்னரும் அமெரிக்க படையினர் ஆப்கானிஸ்தானில் இருந்தால் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும்? என்பது குறித்து எங்கள் தலைமை முடிவு செய்யும் என்று தலிபான் செய்தித் தொடர்பாளர் சுஹைல் ஷஹீன் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் உள்ள தூதர்கள், தொண்டு நிறுவனங்கள் மீது தலிபான்கள் தாக்குதல் நடத்தமாட்டர்கள். எனவே, அவர்களின் பாதுகாப்புக்கு படையினர் தேவையில்லை. நாங்கள் வெளிநாட்டுப் படையினருக்கு மட்டுமே எதிரானவர்கள். வெளிநாட்டு தூதர்களுக்கோ, தொண்டு நிறுவனங்களுக்கோ எதிரிகள் அல்ல எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, தலிபான்களுடன் சமாதான பேச்சுக்கும், போர் நிறுத்தத்துக்கும் அரசு தயாராக உள்ளது. அமைதிக்கான தங்கள் உறுதிப்பாட்டை தலிபன்கள் நிரூபிக்க வேண்டும் என அரசாங்கத்தின் சார்பாகப் பேசிய ரஸ்வான் எம்.பி. முராத் தெரிவித்துள்ளார்.

நேட்டோ படை விலக்கல் பொறுப்பற்ற முறையில் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (ஐ)



## மியான்மாரில் மோதல்: மக்கள் உட்பட 25 பேர் பலி!

*யங்கூன், ஜூலை 06*

மியன்மாரில் காட்டுப் பகுதி கிராமம் ஒன்றுக்குள் புகுந்த இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் ஆயுதம் ஏந்திய போராளிகள், பொது மக்கள் உட்பட 25 பேர் பலியாகினர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் மத்திய பிரதேசமான சகைன் பிராந்தியத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

திடீரென கிராமத்துக்குள் புகுந்த இராணுவத்தினர், கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தினர். மக்கள் பாதுகாப்பு தேடி வீடுகளுக்குள் பதுங்கினர். தாக்குதலின் பின்னர்கூட மக்கள் வெளியே வரவில்லை. இதனால், சனிக்கிழமையே இறந்தவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன.

சனிக்கிழமை 17 சடலங்களும், நேற்று ஞாயிற்றுக்கிழமை 8 சடலங்களும் மீட்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டன. இராணுவம் தொடர்ந்தும் அங்கு தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தில் அப்பகுதி மக்கள் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

மியன்மாரில் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் பதவியேற்கவிருந்த நிலையில், இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களில் ஈடுபட்டனர். இதை அடக்க வன்முறைகளை இராணுவம் கட்டவிழ்த்தது. இதனால் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். இந்தநிலையில், அங்கு ஆயுதப் போராட்டம் தலையெடுத்து வருகின்றது. இதுவரை 890 போராட் டக்காரர்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நூறுக்குமேல் ஏவுகணை தளங்களை பாலைவனத்தில் அமைக்கிறது சீனா!

### தகவல் வெளயிட்டது வாஷிங்டன் போஸ்ட்

*வாஷிங்டன், ஜூலை 06*

கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை செலுத்தவல்ல சைலோ எனப்படும் 119 தளங்களை சீனா கொன்சூ மாகாணத்தின் பாலைவனத்தில் நிறுவி வருகின்றது என்று அமெரிக்காவின் வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை கூறியுள்ளது.

சீனா தன் அணு ஆயுத வலுவை அதிகரிப்பது கவலைக்கு உரியது என்றும், இது குறித்து அமெரிக்கா உடன் பேச்சு நடத்த வேண்டும் என்றும் அந்தப் பத்திரிகை வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட அமெரிக்காவின் உள்விவகார அமைச்சின் பேச்சாளர் நெட் பிரைஸ், "சீனா தன் பல தசாப்த அணு ஆயுத கொள்கைகளில் இருந்து மாறுபட்டு நடப்பதாகத் தெரிகிறது.




சீனாவின் நோக்கம் என்ன என்பது குறித்து சந்தேகம் எழுவதாகவும் அவர் கூறியுள்ளார். அத்துடன், அணு ஆயுத அபாயத்தைக் குறைக்கச் சாத்தியமான வழிமுறைகளை சீனா மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, சீனாவின் அரச பத்திரிகையான குளோபல் ரைம்ஸ், அமெரிக்கா மற்றும் மேற்கத்தைய நிறுவனங்கள் தொடர்ந்து சீனாவின் அணு ஆயுத அதிகரிப்பு மற்றும் சைலோ தளங்கள் அமைக்கப்படுவது குறித்து மதிப்பீடுகளை செய்து வருகின்றன.

வதந்திகளின் அடிப்படையில் இந்தப் பிரச்னைகள் கிளப்பிவிடப்பட்டுள்ளன. பொது மக்களை சீனாவின் அணு ஆயுதத்தின் பக்கம் திசை திருப்பி சீனாவை அதற்கு எதிர்வினையாற்ற வைப்பதுதான் அமெரிக்காவின் நோக்கம். மேற்குலகின் கருத்துக்களை கண்டு கொள்ளாமல் சீனா தன் பாதுகாப்புக்கு தேவையான ஆயுதங்களை உருவாக்க வேண்டும் என்று அந்த நாளிதழ் தெரிவித்துள்ளது. (ஐ)

## சிங்கப்பூரில் 10 இல் 3 பேருக்கு வேலை பறிபோகும் அச்சநிலை!

*சிங்கப்பூர், ஜூலை 06*

சிங்கப்பூரில் 10இல் 3 பேர் தங்களின் வேலை பறிபோகக்கூடும் என்றும் புது வேலை கிடைக்காமல் போகக்கூடும் எனவும் கவலைப் படுகின்றனர் என்று தெரிவித்துள்ளனர்.

அத்துடன், வேலை வாய்ப்பு இல்லாதவர்களும், தற்போது படித்துக் கொண்டிருப்பவர்களும் மற்ற அனைத்துப் பிரிவினரைக் காட்டிலும் அதிக கவலையில் உள்ளனர் என்று கூறப்படுகிறது.

சிங்கப்பூர் கொள்கை ஆய்வு மையம் 2019 ஆம் ஆண்டு முதல் கடந்த மார்ச் மாதம் வரை நடத்திய ஆய்விலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. இதன்போது 2012 சிங்கப்பூர் மக்களிடம் கருத்துக்கள் பெறப்பட்டன.

இதேபோன்று 21 -35 வயது பிரிவு இளைய சமூகத்தினரில் 33.3 வீதத்தினரும், 36 - 50 வயதுப் பிரிவினரில் 34.9 வீதத்தினரும் அதிக கவலைக்கு ஆட்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# கோபா அமெரிக்க உதைபந்து: அரையிறுதியில் ஆர்ஜென்ரீனா




பிரேஸிலியா, ஜூலை 06

ஈக்குவடோர் அணியை 3-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அணி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

47ஆவது கோபா அமெரிக்கா உதைபந்தாட்டப் போட்டி பிரேஸில் நாட்டில் ரசிகர்கள் இன்றி நடந்து வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற காலிறுதி சுற்றில் ஈக்குவடோர் அணியும், ஆர்ஜென்ரீனா அணியும் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற முதல் பாதி ஆட்டத்தின் இறுதி கட்டத்தில், ஆர்ஜென்ரீனாவின் ரொட்ரிகோ டி போல் முதல் கோல் அடித்தார்.

இதன்மூலம், முதல் பாதியில் ஆர்ஜென்ரீனா அணி முன்னிலை பெற்றது. தொடர்ந்து, இரண்டாவது பாதி ஆட்டத்தில் 84ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீன வீரர் லாடாரோ மார்ட்டினஸும், 93ஆவது நிமிடத்தில் மெஸ்ஸியும் அடுத்தடுத்து கோல் அடித்தனர். ஈக்குவடோர் அணியால் பதில் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை.

இதன்மூலம், 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று ஆர்ஜென்ரீனா அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

ஏற்கனவே பிரேஸில், பெரு, கொலம்பியா அணிகள் அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது(ஐ)




## யூரோ கிண்ண உதைபந்தாட்டம்

# 25 ஆண்டுகளின் பின்னர் அரையிறுதியில் இங்கிலாந்து

ரோம், ஜூலை 06

உக்ரைன் அணியை 4 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்ட இங்கிலாந்து அணி 25 ஆண்டுகளின் பின்னர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

16ஆவது யூரோ கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் நேற்று முன்தினம் இத்தாலியின் தலைநகர் ரோம் நகரில் நடந்த காலிறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து அணி, உக்ரைனை சந்தித்தது.

இதில், எதிர்பார்த்தது போலவே பலம் வாய்ந்த இங்கிலாந்தின் ஆதிக்கமே மேலோங்கியது. 4ஆவது நிமிடத்தில் இங்கிலாந்தின் கோல் கணக்கை கப்டன் ஹரி கேன் தொடங்கி வைத்தார். சக வீரர் ஸ்ரெர்லிங் தட்டிக்கொடுத்த பந்தை அவர் நேர்த்தியாக வலைக்குள் தள்ளினார்.

இதன் பிறகு மேலும் சில ஷொட்களை உக்ரைன் கோல் காப்பாளர் ஜியார்கி புஷ்சன் தடுத்து விட்டார். பிற்பாதியில் இங்கிலாந்து வீரர்கள் மேலும் ஆக்ரோஷமாக துடிப்புடன் செயல்பட்டனர். 46ஆவது நிமிடத்தில் 'ப்றீகிக்' வாய்ப்பில் லுக் ஷா கோல் பகுதியை நோக்கி தூக்கியடித்த பந்தை அங்கு நின்ற இங்கிலாந்தின் ஹரி மேக்குவையர் துள்ளிக் குதித்து தலையால் முட்டி கோலாக்கினார்.

தொடர்ந்து 50ஆவது நிமிடத்தில் ஹரி கேனும், 63ஆவது நிமிடத்தில் ஜோர்டன் ஹென்டர்சனும் தலையால் முட்டி கோல் அடித்து அசத்தினர்.

இறுதி வரை உக்ரைனால் பதில் கோல் போட முடியவில்லை. இதனால், 4 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இங்கிலாந்து அரையிறுதிக்கு முன்னேறியது.

இந்த வெற்றியின் மூலம், 1996ஆம் ஆண்டுக்கு பிறகு முதன்முறையாக அரையிறுதிக்கு வந்துள்ள இங்கிலாந்து அணி, அடுத்து டென்மார்க் அணியை 7 ஆம் திகதி சந்திக்கிறது. (ஐ)

# மழையால் தப்பியது இலங்கை!

பிரிஸ்டல், ஜூலை 06

இங்கிலாந்து - இலங்கை அணிகள் மோதிய மூன்றாவது ஒருநாள் போட்டி மழையால் கைவிடப்பட்டது. இதனால், ஒருநாள் தொடரிலும் வெள்ளையடிப்பு செய்யப்படுவதிலிருந்து இலங்கை அணி தப்பியது.

இலங்கை கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற் றுப்பயணம் சென்றது. இருபது - 20 தொடரை 3 - 0 என்ற கணக்கில் இலங்கை



அணி முழுமையாக இழந்தது. இதைத் தொடர்ந்து ஒருநாள் போட்டி தொடர் ஆரம்பமானது.

முதல் இரு போட்டிகளை யும் இங்கிலாந்து வெற்றி கொண்ட நிலையில் நேற்று முன்தினம் மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி பிரிஸ்டனில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய் தது. இதனால் இலங்கை அணி துடுப்பெடுத்தாடியது.

41.1 ஓவர்களில் சகல விக் கெட்களையும் இழந்த இலங்கை அணி 166 ஓட்டங்களையே பெற்றது. இங்கிலாந்தின் பந்து வீச்சில் ரொம் கரன் 4, வோக்ஸ், வில்லி ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இங்கிலாந்து அணி பதி லுக்கு துடுப்பெடுத்தாட ஆரம்பிக்க முன்னராக கடும் மழை பெய்ய ஆரம்பித்தது. தொடர்ந்து பெய்த மழையால் போட்டியை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்படவே, போட்டி கைவிடப்பட்டதாக அறிவிகக்கப்பட்டது.

இதனால், 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2 - 0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி கைப்பற்றியது. (ஐ)

# சீன நிறுவனத்தை ஒதுக்கிய இந்திய ஒலிம்பிக் குழு!

புதுடில்லி, ஜூலை,

சீனாவில் உள்ள லி லிங் எனும் நிறுவனத்தின் அனுசரணையை இந்திய ஒலிம்பிக் குழு ஐ இந்திய ஒலிம்பிக் அசோசியேஷன் (ஐ.ஒ.ஏ.) கைவிட்டுள்ளது.

இந்திய, சீன எல்லையான லடாக்கில் கடந்த ஆண்டு சீனப்படைகள் ஊடுருவி நடத்திய தாக்குதலில் 20 இந்திய படை யினர் கொல் லப்பட்டனர். இதன் பின்னர் சீன பொருட்களுக்கு இந்தி யாவில் தடைவிதிக்கப்பட்டது. பணம் கொழிக்கும் விளையாட்டான இந்திய கிரிக்கெட் சீன அனுசரணையைக் கைவிட்டது.




சீனாவில் உள்ள விளையாட்டு ஆடை தயாரிப்பு நிறுவனமான லி லிங், இந்திய ஒலிம்பிக்கின் அதிகார பூர்வ அனுசரணையாளராக இருக்கிறது. ரோக்கியோ ஒலிம்பிக்கின் பின்னர் இந்த அனுசரணை ஒப்பந்தம் முடிவுக்கு வருகிறது. ஆனால், அதற்கு முன்னராக லி லிங் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதாக இந்திய ஒலிம்பிக் அறிவித்துள்ளது.

லி லிங் சின்னத்துடனான உடைகள், விளையாட்டு உபகரணங்கள் எவற்றையும் இந்திய ஒலிம்பிக் வீரர்கள் பயன்படுத்த மாட்டார்கள். நாட்டு மக்களின் உணர்வுகளையும், ரசிகர்களின் உணர்ச்சிகளையும் நாங்கள் அறிவோம், ஆகையால் லி லிங்குடனான ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாக ஐ.ஒ.ஏ. தலைவர் நரிந்தர் பாத்ரா, பொதுச்செயலாளர் ராஜீவ் மேத்தா ஆகியோர் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

# மே.இந்திய தீவுகளுக்கு எதிரான தொடர் தென்னாபிரிக்கா வசம்!



சென். ஜோர்ஜ், ஜூலை 06

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான இறுதி இருபது - 20 போட்டியை25 ஓட்டங்களால் வெற்றி கொண்டது தென்னாபிரிக்க அணி. இதன்மூலம், 3 - 2 என்ற கணக்கில் தொடரை அந்த அணி வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் சென்று விளையாடி வருகிறது. முதல் முடிவடைந்த 4 போட்டிகளிலும் இரு அணிகளும் தலா இரு போட்டிகளில் வெற்றி பெற்ற நிலையில் இறுதிப் போட்டியில் சனிக்கிழமை இரவு இரு அணிகளும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணியின் தலைவர் பவுமா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் தென்னாபிரிக்க அணி 4 விக் கெட்கள் இழப்புக்கு 168 ஓட்டங் களை எடுத்தது.

169 ஓட்டங்கள் என்ற இலக்குடன் மேற்கிந்தியத்தீவுகள் அணி 20 ஓவர்களில் 9 விக் கெட்களை இழந்து 143 ஓட்டங்களையே பெற்றது.

இதனால், 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகள் தோல்வியடைந்தது. இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரை தென்னாபிரிக்கா 3-2 என்ற கணக்கில் வென்றது.

(ஐ)

# இந்தியா போன்ற பேரவலநிலை இலங்கையில் சில மாதங்களில்



**கொழும்பு, ஜூலை 06**

**"இந்தியாவில் புதிய வைரஸ் திரிபு கண்டறியப்பட்டு சில மாதங்களின் பின்னரே அங்கு பெரும் அவலநிலை ஏற்பட்டது. அதேபோன்று இலங்கையிலும் புதிய வைரஸ் திரிபுகள் இப்போதுதான் அடையாளம் காணப்படுவதால் இன்னும் சில மாதங்களில் பேரவல நிலைமை ஏற்படக்கூடும்."**

- இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரும் ஊடகக் குழு உறுப்பினருமான மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் மேலும் தெரிவித்ததாவது:-

"தற்போது இலங்கையில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. இதனால் இனம் காணப்படும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது. ஆனால், தொற்றாளர்கள் வீதம் இலங்கையில் அதிகரித்தே செல்கின்றது. உயிரிழப்பும் அதிகரித்துச் செல்கின்றது. இந்தக் காலகட்டத்தில் புதிய திரிபுகளும் அவதானிக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் டெல்டா வைரஸ் அவதானிக்கப்பட்டு 4 மாதங்களின் பின்னரே மோசமான நிலைமை அங்கு ஏற்பட்டது. பெருமளவானோர் உயிரிழந்தனர். இலங்கையிலும் டெல்டா வைரஸ் தற்போதுதான் இனம் காணப்பட்டுள்ளது. சில மாதங்களில் இந்தியாவில் ஏற்பட்டதைப் போன்றதொரு பேரவலநிலை இங்கும் ஏற்படலாம்.

எனவே, சுகாதார அமைச்சு, பி.சி.ஆர். சோதனைகளின் எண்ணிக்கையை இலங்கையில் அதிகரிக்கவேண்டும். இதன் ஊடாகவே தொற்றைக் கட்டுப்படுத்த முடியும்" - என்றார். (இ)

# பஸிலின் பாராளுமன்ற வருகையால் அமைச்சர்கள் சிலர் கடும் அதிருப்தி!

கொழும்பு, ஜூலை 06

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற வருகையை முன்னிட்டு சில அமைச்சர்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்தச் செய்திகளில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அனைத்து அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களில் பஸில் கையடிப்பார் எனவும், இதனால் சுயாதீனமாக இயங்க முடியாத நிலை எற்படும் எனவும் அமைச்சர்கள் சிலர் தமக்கு நெருக்கமானவர்களிடம் உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

எனவே, ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் இது தொடர்பில் எடுத்துரைத்து , சுயாதீனமாக இயங்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்வது தொடர்பில் இவர்கள் தற்போது கவனம் செலுத்தியுள்ளனர்.

பஸில் ராஜபக்ஷ விரைவில் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்கவுள்ளார். அவர் பொருளாதார விவகார மற்றும் நிதி அமைச்சுப் பதவியை ஏற்கவுள்ளார். முதலீட்டுச் சபை, துறைமுக நகரம் உட்பட முக்கிய திணைக்களங்கள் பஸில் வசம் கொண்டுவரப்படவுள்ளன.

இதேவேளை, பஸிலின் மீள் வருகை தொடர்பில் அமைச்சர்களான விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில போன்றவர்களும் அதிருப்தி நிலையிலேயே உள்ளனர். இந்நிலையில், விமலை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ள பஸில், ஏனைய இருவரையும் விரைவில் சந்திக்கவுள்ளார் - என்றுள்ளது. (இ)

# சீனகழிவை சேதன பசளையாக கொண்டு வருவதே அரசின் திட்டம்

## நுவரெலியா ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் குற்றச்சாட்டு



நுவரெலியா, ஜூலை 06.

"சீன நாட்டின் கழிவுகளை இலங்கைக்குக் கொண்டு வந்து அதனை சேதனப் பசளை எனக் கூறி விவசாயிகளுக்கு வழங்குவதே அரசாங்கத்தின் திட்டமாகும். எனவே, விவசாயிகளை இல்லாமல் செய்து இலங்கை நாட்டை சீனாவின் காலனியாக மாற்றுவதே அரசின் இந்தத் திட்டமிடப்பட்ட சதியாகும். இதற்கு விவசாயிகள் ஒரு போதும் ஒத்துழைக்கமாட்டார்கள்."

- இவ்வாறு நுவரெலியா விவசாயிகள் தெரிவித்தனர்.

இரசாயன உரத் தட்டுப்பாடு தொடர்பாக நுவரெலியா விவசாயிகள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நேற்றுக் காலை நுவரெலியா - பதுளை வீதியில் அமைந்துள்ள புதிய மார்கட் கட்டடத்துக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து அவர்கள் ஊர்வலமாக நுவரெலியா நகரின் மத்தியில் அமைந்துள்ள கவிதாஸ் திடலுக்கு முன்பாகக் கூடி நின்று தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதன்போது நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் சுசில்சாந்த, செயலாளர் அருணசாந்த, உறுப்பினர் சந்தியராஜன், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆர்.ராஜாராம், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா அமைப்பாளர் தினேஷ் கிருஷாந்த கீகனகே உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த எதிர்ப்பு போராட்டத்துக்கு ஆதரவாக நுவரெலியா நகர வர்த்தகர்களும் தங்களுடைய வியாபார நிலையங்களை ஒரு மணித்தியாலத்துக்கு மூடி தங்களுடைய ஒத்துழப்பை வழங்கினர்.

மேலும், விவசாயிகளும் மரக்கறி வியாபாரிகளும் இணைந்து தட்டுப்பாடு இல்லாமல் இரசாயன உரத்தை பெற்றுக்கொடுக்குமாறு பதாதைகளை ஏந்திய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நுவரெலியா பொலிஸ் நிலையப் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். அசம்பாவிதங்கள் எதுவும் இன்றி போராட்டம் மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்றது. (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 339 பேர் கைது

கொழும்பு, ஜூலை 06

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய மேலும் 339 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டி பிரதேசத்திலேயே அதிகளவானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். குறித்த பிரதேசத்தில் 54 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 47 ஆயிரத்து 579 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)


# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 05 - 01 - 1930 |  | 03 - 07 - 2021 |

## குருநாதர் திருநாவுக்கரசு

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும், பிரான்ஸ் Quincy sous senart ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட குருநாதர் திருநாவுக்கரசு அவர்கள் 03.07.2021 சனிக்கிழமை அன்று காலமானார் என்ற செய்தியை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார், காலஞ்சென்ற குருநாதர் – நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பு – சொர்ணம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், ஜாஸ்மின், உஷாராணி ( உஷா ), சாந்தகுமார் (சாமி), ரதி (சசி), சிசிலியா ( சிசி ), காலஞ்சென்றவர்களான பாமதேவன் ( தேவன் ), மகாதேவன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,காலஞ்சென்ற கனகரத்தினம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,நடராஜா(ஆனந்தன்), மரியதாசன், காலஞ்சென்ற ராசலிங்கம், சதானந்தன், மோகனேஸ்வரி (சுதா) ஆகியோரின் அன்பு மாமனாரும்,ஜனொஜன் (ஜனொ), பிரின்சியா– சதிஸ், ஜோனாதன், ஜோன் பதிச்த் (பதிச்த்), லெதிசிய – றெமொ, ரெமிஜச் (ரெமி), டெனிசன் (பொனி) – அனிதா, டெல்பின், எவ்லின், ரஜிதா, ரெஜினா– தனுஷன், ரஜிவரன் ( ரஜி ), ரொபன், ரெஜின் – அன்லொர், மெல்வினா ஆகியோரின் அன்புத் தாத்தாவும்,ரோஹித், அனஸ்தாசியா (அனா), ஆரோன், ஜெய்டன் ஆகியோரின் கொள்ளுப் பேரனும் ஆவார்.

*பார்வைக்கு :*
Tuesday, 06 Jul 2021 10:00 AM - 12:00 PM
Maison Funéraire de Quincy – sous-Sénart 55 Rue de Boissy – Saint - Léger, 91480 Quincy-sous-Sénart, France

*பார்வைக்கு :*
Tuesday, 06 Jul 2021 2:00 PM - 4:00 PM
Maison Funéraire de Quincy-sous-Sénart 55 Rue de Boissy – Saint-Léger, 91480 Quincy-sous-Sénart, France

*பார்வைக்கு :*
Wednesday, 07 Jul 2021 10:00 AM - 12:00 PM
Maison Funéraire de Quincy-sous-Sénart 55 Rue de Boissy – Saint-Léger, 91480 Quincy-sous-Sénart, France

*பார்வைக்கு :*
Wednesday, 07 Jul 2021 2:00 PM - 4:00 PM
Maison Funéraire de Quincy-sous-Sénart 55 Rue de Boissy – Saint-Léger, 91480 Quincy-sous-Sénart, France

*கிரியை :*
Thursday, 08 Jul 2021 9:30 AM
Maison Funéraire de Quincy – sous-Sénart 55 Rue de Boissy – Saint-Léger, 91480 Quincy-sous-Sénart, France

*இறுதி ஆராதனை:*
Thursday, 08 Jul 2021 10:30 AM
Eglise Sainte Croix 91480 Quincy-sous-Sénart, France

*நல்லடக்கம் :*
Thursday, 08 Jul 2021 11:00 AM
Cimetière de Quincy-sous-Sénart Rue de Boissy – Saint-Léger, 91480 Quincy-sous-Sénart, France

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**ரஜிவரன் - பேரன் - 0033778104368**
**டெனிசன்** - Bony **(பேரன்) - 0033666598016**
**உஷாராணி (மகள்) - 0033767666717**
**மரியதாசன் (மருமகன்) - 0033652640923**

தகவல்
**குடும்பத்தினர்.**

## ஐ.தே.கவின்...

செயலாளர் பாலித ரங்கே பண்டாரவினால் நாட்டை கட்டியெழுப்ப இணைந்து செயல்பட ஒன்றிணையுமாறு எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையுமாறு அந்தக் கட்சியின் செயலாளரால் அழைப்பு விடுக்கப்பட்டது. இது உண்மையான செய்தி என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் செயல்குழு உறுப்பினர்களின் இணக்கத்தோடு ஐக்கிய மக்கள் சக்தி ஆரம்பிக்கப்பட்டது என்பது அதன் உறுப்பினர்களுக்கு தற்போது மறந்து போயுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை கடந்த தேர்தல் நிரூபித்துக்காட்டியுள்ளது. அது எழுமாறாக நடந்தது அல்ல.

ஐக்கிய தேசியக் கட்சி வீழ்ச்சியடைந்து செல்வதற்கு காரணம் என்ன என்பது குறித்து சுயவிசாரணை செய்து கொள்வது அந் தக் கட்சிக்கு உள்ள ஒரே தீர்வு என்ப தோடு எமது அரசாங்கம் வீழ்ச்சியடை வதற்கு முக்கிய காரணமான மத்திய வங்கி பிணைமுறி மோசடிக்காரர்களை பாதுகாப்பது மற்றும் இரகசிய ஒப்பந்தங்களை மேற்கொண்டு தந்திரமாக மேற்கொள்ளும் நடவடிக் கைகளை மக்கள் ஆதரிப்பார்களாக என்று பரிசீலனை செய்து பார்க்க வேண்டும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரிதிநிதிகளை நீக்கியது மக்களின் ஜனநாயத்தின் உயிர் நாடிக்கு கொடுக்கப்பட்ட தாக்குதல் என்பதோடு மக்கள் பிரிதிநிதிகளை பிணையாக வைத்துக் கொண்டுள்ள கட்சி இவ்வாறான கோரிக்கையை வைப்பது கேலியாக உள்ளது.

ஆரம்பகால ஐக்கிய தேசியக் கட்சியின் பெறுமதி மற்றும் முன்னுதாரண செயல்பாடுகளை ஐக்கிய மக்கள் சக்தி தற்போது முன்னெடுத்து வருகின்றது. அத்தோடு சகல இனங்களையும் உள்ளடக்கி ஒரு புதிய பயணத்தை ஆரம்பித்திருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் அசுத்தங்களை நீக்கி சுத்தமாகிய பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையுமாக இருந்தால் அதற்காக கதவுகள் திறக்கட்டிருக்கின்றன. இல்லை ஐக்கிய தேசியக் கட்சி அதே பாதையில் பயணிக்கும் என்றிருந்தால் அதற்கான கவலைப்படுவதே அல்லாமல் வேறு மாற்றீடு ஒன்றும் இல்லை-என்றுள்ளது.

## வடக்கில்...

நடவடிக்கை நேற்று முதல் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வடக்கு மாவட்டங்களான கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இராணுவத்தினரால் 60வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், வவுனியாவில் 60வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு நேற்று தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை. இவ்விடயம் குறித்து வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே மேற்கண்டவாறு தெரி வித்தார்.

எனினும் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம். மகேந்திரனிடம் தொடர்பு கொண்டு வவுனியாவில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை என்று வினவிய போது, இவ்விடயம் குறித்து வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளரிடம் கேட்டறிந்து கொள்ளுமாறு தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பல்கலைக்கழகம்...

மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர்கள் சங்கமும் சோசலிச மாணவர் சங்கமும் இணைந்து கல்வி அமைச்சுக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

“பல்கலைக்கழகம் செல்வதற்கு வாய்ப்புப் பெறும் அனைத்து மாணவர்களுக்கும் அதற்கான வரத்தை வழங்குவோம் என்று கூறி சுபீட்சமான எதிர்காலம் என்ற கொள்கைப் பிரகடனத்தைக் கொண்டுவந்த இந்த அரசு தற்போது என்ன செய்து கொண்டிருக்கின்றது?

முழுப் பல்கலைக்கழக முறைமையையும் அழிவுக்குட்படுத்தும் வகையில் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டமூலத்தை இந்த அரசு கொண்டு வந்துள்ளது.

ஒரு பக்கம் 1968-16 இலக்கத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அமைத்த சட்டம் உள்ளது. அதற்கென பல்கலைக்கழக ஆணைக்குழுவொன்றும் செயற்பட்டு வருகின்றது.

அது அரச பல்கலைக்கழக சட்டமூலத்தின் கீழ் வரும்போது மறுப்பக்கத்தில் தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குவதற்காகவே இத்தகைய சட்டமூலங்களை அரசு கொண்டு வருகின்றது.

எமது நாட்டின் இலவசக் கல்வி முறைமையைத் தனியார் மயப்படுத்தும் முயற்சியாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது. இந்த நாட்டின் சுதந்திரக் கல்வி முறைமையைக் குழிதோண்டி புதைக்க முயல்கின்றனர்.

கல்வித்துறையை இராணுவமயப் படுத்தும் நடவடிக்கை உலகில் வேறு எந்த நாடுகளிலும் இல்லை.

இராணுவம் என்பது வேறு ஒரு நடவடிக்கையை முன்னெடுக்கும் தரப்பு. இராணுவத்துக்கென நற்பெயர் உள்ளது. எனினும், தற்போது என்ன நடந்துள்ளது?

தற்போது வரையில் இந்த அரசு பல நிறுவனங்கள், அமைச்சுக்களுக்கு இராணுவத்தினரை நியமித்து அவர்களை அசாதாரண நிலைமைக்குத் தள்ளியுள்ளது. இராணுவத்துக்கென இருந்த நற்பெயரை இல்லாமல் செய்துள்ளது.

பல்கலைக்கழகம் என்பது இராணுவ பங்கர் இல்லை. இராணுவத்துக்கு அடங்கிச் செல்லும் இடமும் இல்லை. அங்கு சுதந்திரமே காணப்பட வேண்டும். இவை அனைத்தையும் நிறுத்தி பல்கலைக்கழக முறைமைய இராணுவமயப்படுத்துவதற்கே அரச தரப்பினர் முனைகின்றனர். இதற்கு நாம் ஒரு போதும் இடமளியோம்” - என்றார். (இ)

## யாழ்.மாநகரில்...

65 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று 288 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டன. இதிலேயே, 65 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி, யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் 16 சிறுவர்கள் உட்பட 55 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

தவிர, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிறந்து 5 நாட்களேயான சிசுவும் கொரோனா தொற்றுக்கு இலக்கானமை கண்டறியப்பட்டுள்ளது.

காரைநகர் மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேருக்கும், யாழ்ப்பாணம் சிறையில் இருவருக்கும், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஒருவருக்குமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் நேற்று 64 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அத்துடன், மன்னார் பொது மருத்துவமனையில் ஒருவருக்கும் நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டது. (ஐ)

## நாட்டின்...

என்பனவே காரணம்.”

- இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற நாட்டின் பொருளாதார நிலை தொடர்பான விசேட ஊடக சந்திப்பில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“2015 முதல் 2019 வரை நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 6.8 ஆக இருந்தது. எனினும், அது பின்னர் 2.3 வரை குறைவடைந்தது.

ரூபாயின் பெறுமதியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக நல்லாட்சி அரசு 3 ஆயிரத்து 89 மில்லியன் அமெரிக்க டொலர்களை சந்தையில் முன்னெடுத்தனர்.

2020ஆம் ஆண்டில் நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதன் விளைவாக நாங்கள் 66 நாட்களை இழந்தோம்.

அந்தநேரத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 16.7 ஆகக் குறைந்தது. இது மிகப்பெரிய பிரச்னையாகும்.

நாட்டில் தற்போது இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ள பொருட்களுக்கு மேலதிகமாக வேறு பொருட்களின் இறக்குமதியை இடைநிறுத்துவதற்கு இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை.

ஆடம்பர பொருட்களின் இறக்குமதி இடைநிறுத்தப்பட வேண்டும் என்று இலங்கை மத்திய வங்கி தரப்பில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அரசு அதனை முன்னெடுக்கவில்லை.

எனினும், நாட்டின் தற்போதைய நிலைமையை முகாமைத்துவம் செய்வதற்கு வேறு மூலோபாயங்களை முன்னெடுப்பதற்கு அரசு எதிர்பார்த்துள்ளது” - என்றார். (இ)

## அரசுக்குள்...

இந்நிலையில், பங்காளிக் கட்சிகளை அரசிலிருந்து வெளியேறுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் இரண்டாம் நிலை உறுப்பினர்கள் நேரடியாக அழுத்தம் கொடுத்து வருகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரான முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மீண்டும் பாராளுமன்றத்துக்கு வரவுள்ளார் எனவும், அவர் அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொள்ளவுள்ளார் எனவும் கூறப்படும் நிலையில் அது தொடர்பில் அரசில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளன என்று கூறப்படுகின்றது.

தற்போதும் அரசின் தீர்மானம் எடுக்கும் சக்தியாக பஸில் ராஜபக்ஷவே உள்ளார் எனவும், அரசில் பிரதான கட்சியால் தாம் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர கூறியிருந்தார்.

அதேபோல் அரசிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெளியேற்றவும், ஏனைய கூட்டணிக் கட்சிகளை வெளியேற்றவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன எனவும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தனித் தீர்மானத்தில் பங்காளிக் கட்சிகளை ஓரங்கட்டுவதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகளான அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் சந்திம வீரக்கொடி எம்.பி ஆகியோர் தெரிவித்தனர்.

மேலும், அமைச்சர் விமல் வீரவன்ஸவின் இல்லத்தில் இறுதியாக நடைபெற்ற கூட்டத்தில், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தன்னிச்சையான செயல்பாடுகள் குறித்தும், அரசில் அங்கம் வகிப்பதா அல்லது தனித்து இயங்குவதா என்பது குறித்தும் பேசப்பட்டது என அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட எம்.பி. ஒருவர் தெரிவித்துள்ளார். (இ)

## பெண்கள்...

பெண்கள் 18 பேர் மற்றும் ஆண்கள் 14 என 32 பேர் கொரோனா தொற்று காரணமாக இவ்வாறு நேற்று முன்தினம் உயிரிழந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இதுவரை இலங்கையில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவர்கலின் மொத்த எண்ணிக்கை 3,268 ஆக உயர்வடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தொழிற்சங்க...

சில்வா தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் புதுவருட கொரோனா கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என்றும் அவர் கூறினார்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 66 ஆயிரத்து 211 ஆக அதிகரித்துள்ளது.

நிறைவுகாண் மருத்துவ தொழில் வல்லுநர் ஒன்றியம் மேற்கொண்டு வரும் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகள் வரத் தாமதிக்கின்றன என்றும் இராணுவத் தளபதி நேற்றிரவு குறிப்பிட்டார்.

இதனால் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## அரச...

அவர்களுக்கு எந்தத் தடையும் இல்லை.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் முன்வைக்கும் கருத்துக்களை எம்மால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இவர்களின் செயல்பாடுகளைக் கவனித்தால் வேறு ஒரு வேலைத்திட்டத்தில் இயங்கிக்கொண்டிருப்பது போன்று தெரிகின்றது. ஆகவே, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியைப் பலவீனப்படுத்தும் செயல்பாடுகளுக்கு நாம் இடமளிக்க மாட்டோம்.

இதேவேளை, பஸில் ராஜபக்ஷ பாராளுமன்ற வருவதும், அவருக்கான பாராளுமன்ற உறுப்புரிமையை விட்டுக் கொடுப்பதும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தனிப்பட்ட தீர்மானமாகும். இதில் ஏனைய கட்சியினர் தலையிட வேண்டிய அவசியம் இல்லை.

பஸில் பாராளுமன்றம் வருவது கூட்டணிக் கட்சிகளுக்குப் பிரச்னை என்றால் அவர்கள் அரச கூட்டணியை விட்டு வெளியேற முடியும்” - என்றார். (இ)

## 42 இலட்சத்துக்கும்...

இதில் 5 ஆயிரத்துக்கும் அதிகமான தடுப்பூசிகள் சீனப் பிரஜைகளுக்கு ஏற்றப்பட்டுள்ளன என்று தொற்று நோயியல் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

‘ஸ்புட்னிக் - 5’ தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 795 பேருக்கு ஏற்றப்பட்டுள்ளது. 14 ஆயிரத்து 427 பேர் குறித்த தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இதேவளை, ‘அஸ்ட்ரா செனகா’ தடுப்பூசியின் முதலாவது டோஸ் 9 இலட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கு ஏற்றப்பட்டுள்ளதுடன், 3 இலட்சத்து 84 ஆயிரத்து 47 பேருக்கு அதன் இரண்டு டோஸ்களும் ஏற்றப்பட்டுள்ளன.

‘கொவிஷீல்ட்’ தடுப்பூசி பெற்றுக் கொள்வதில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக 5 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் இரண்டாவது டோஸுக்காகக் காத்திருப்புப் பட்டியலில் உள்ளனர்.

இவர்களுக்கு மாற்று தடுப்பூசியாக இரண்டாவது டோஸாக ‘பைஸர்’ அல்லது ‘மொடர்னா’ கொரோனாத் தடுப்பூசிகள் போதியளவு கிடைத்தவுடன் அவற்றை ஏற்றுவதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. (இ)

ஈழநாடு
Eelanadu

# விபசார விடுதி முற்றுகை; 14 பேர் வசமாக சிக்கினர்!

கொழும்பு, ஜூலை 06

மீரிஹான பாகொட வீதியில், மூன்று மாடி வீட்டிலுள்ள சொகுசு வீடொன்றில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் நடத்தப்பட்ட விபசார விடுதியொன்றை முற்றுகையிட்ட நுகேகொடை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் 12 பெண்கள் உள்ளிட்ட 14 பேரைக் கைதுசெய்துள்ளனர்.

மேற்படி சொகுசு வீட்டில் ஒவ்வொரு மாடிகளிலும் ஒவ்வொரு மசாஜ் நிலையங்கள் நடத்தப்பட்டுள்ளன என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சுகாதார விதிமுறைகள், தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறும் வகையில் குறித்த மசாஜ் நிலையத்துக்கு நபர்கள் வந்து சென்றுள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.

தொலைபேசி மற்றும் இணையத்தளம் மூலமாக 6 ஆயிரம் ரூபாய் மற்றும் 20 ஆயிரம் ரூபாய்க்குப் பெண்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலி, வென்னப்புவ, தம்புள்ளை, சீதுவ, பண்டாரவளை, மெதவாச்சி, பிபிலை, வெயாங்கொட, கேகாலை, தனமல்வில, எம்பிலிப்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 18 தொடக்கம் 46 வயதுடைய பெண்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பல பெண்கள் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடு அமுலிலுள்ள காலப்பகுதியில் குறித்த நிலையத்துக்கு வந்துள்ளனர் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)




# "காணாமல்போன எம் உறவுகள் எங்கே? சர்வதேச சமூகமே நீதியைப் பெற்றுத் தா"

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஜூலை 06

**காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 1600 நாட்களை எட்டி யுள்ளது. அதையொட்டி அவர்களால் போராட்டம் நடத்தப்படும் இடத்துக்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் போன்றவற்றின் கொடிகளை ஏந்தியிருந்தனர்.

"காணாமல்போன எங்கள் உறவுகள் எங்கே? காணாமல்போன எங்கள் உறவுகளுக்கு சர்வதேச சமூகமே நீதியைப் பெற்றுத் தா" என்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் வலியுறுத்தினர்.

இதன்போது அவர்கள் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

"காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளான நாங்கள், பொறுப்பு மற்றும் நீதியைக் காண கடந்த 1600 நாட்களாக, ஒரு நாளைக்கு ஒரு நேர உணவுத் தவிர்ப்பு என்று தொடர்ந்து போராடி வருகின்றோம்.

தற்போது நாட்டுக்குள் வந்துள்ள சீனா, ஐ.நா.பாதுகாப்புக் குழுவில் தமிழர்களுக்கான நீதியை எதிர்க்கின்றது. இதனால் சீனாவை எமது நிலத்தை விட்டு வெளியேறுமாறு கேட்கின்றோம்.

மனித உரிமைகளில் அக்கறை கொண்ட அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா போன்ற நாடுகள் இலங்கையில் தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வை ஏற்படுத்தத் தாமதிக்காமல் செயற்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்" - என்றனர். (இ)

# காணாமல்போன நபர் சடலமாக மலசல குழிக்குள்ளிருந்து மீட்பு

கொழும்பு, ஜூலை 06

கொஸ்லாந்தை, ஊவா மாவெலகம ஒக்பீல்ட் தோட்டத்தில் காணாமல் போன நபர், கொஸ்லாந்தை பனாவல பிரதேசத்திலுள்ள மலசலக் குழிக்குள் இருந்து நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

மேற்படி தோட்டத்தைச் சேர்ந்த கந்தையா நாகேஸ் (வயது 39) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த நபர் கடந்த மாதம் 29ஆம் திகதி தொடக்கம் காணாமல் போயிருந்தார் என்று கொஸ்லாந்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

# முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் ஹக்கீமுடன் பிரிட்டன் தூதர் பேச்சு

கொழும்பு, ஜூலை 06

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கிடையிலான முக்கிய சந்திப்பு நேற்று நடைபெற்றது.

கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான வெஸ்ட் மினிஸ்டர் ஹவுஸில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது இலங்கையில் முஸ்லிம் சமூகத்தைப் பாதிக்கும் அண்மைய நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடியதாக பிரிட்டன் தூதுவர் தனது ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இலங்கையில் சட்டத்தின் ஆட்சி



மற்றும் அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய நல்லிணக்க முயற்சிகளுக்கு பிரிட்டன் ஆதரவு வழங்கும் என்றும் சாரா ஹல்டன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-றெமோ,தெறி திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்
**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு